விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10




திருப்திகரமான சலவைக்கு
மில்க் வைற் நீல சோப்
விலை சதம் 60 மட்டுமே


# ஈழநாடு
## வார மலர்
*THE EELA NADU VARAMALAR*


சகலவித பல் வியாதிகளையும்
போக்கவல்லது
அண்ணா பற்பொடி
இலங்கையின்
எப்பாகத்திலும் கிடைக்கும்.
கூடுதலாக அண்ணா
பற்பொடியை வாங்கும்
வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு
அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி: 7412


UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS RECEIVED PERIODICALS DIVISION LIBRARY

மலர் 20 | புரட்டாதி 8 | ஷவ்வால் 20 | ஞாயிற்றுக்கிழமை | (24—9—78) | இதழ் 225

# வேலைநிறுத்த தடை உத்தரவு தொழிற்சங்க உரிமைக்கு முரண்

### உலக தொழிற்சங்க சம்மேளனம்
## ஜனாதிபதிக்கு தந்தி
### அரசைக் கவிழ்க்கும் ஆரம்ப சதியே வேலை நிறுத்தம் என ஜே. ஆர். பதில்

(கொழும்பு)

இம்மாதம் 28-ம் திகதி நடைபெறவுள்ள உத்தேச அடையாள வேலை நிறுத்தத்தை இலங்கை அரசு சட்டவிரோதமானது எனப் பிரகடனம் செய்தது; சர்வதேச தொழிற்சங்க உரிமைகளுக்கு விரோதமானது. எனவே இம்முடிவை மாற்றி தொழிலாளர்களினதும், தொழிற்சங்கங்களினதும் உரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறு உலக தொழிற்சங்க சம்மேளனம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைக் கேட்டுள்ளது.

ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட இன்றைய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் ஆரம்ப சதி முயற்சியே இந்த அடையாள வேலைநிறுத்தமாகும் என்று திரு.ஜெயவர்த்தனா மேற்குறிப்பிட்ட சம்மேளனததிற்கு எழுதியுள்ள பதிலில் தெரிவித்துள்ளார்.

வேலைநிறுத்தம்குறித்து செக்கோசிலாவாக்கியாவில் இருக்கும் உலக தொழிற்சங்க சம்மேளனம் திரு.ஜே. ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பியுள்ள தந்தியின் விபரம் வருமாறு:-

சில கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி இம்மாதம் 28ம் திகதி நடத்தவுள்ள வேலைநிறுத்தத்தை இலங்கை அரசு சட்டவிரோதமாகப்பிரகடனம்செய்துள்ளது தொழிற்சங்க உரிமை தொடர்பாக 9-வது உலக தொழிற்சங்க காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசப் பிரகடனங்களுக்கும் சர்வதேச தொழிற்சங்க தீர்மானங்களுக்கும் முரணானது.

எனவே தொளிலாளர்களினதும் தொழிற் சங்கங்களினதும் உரிமைகளுக்கும் மதிப்பளியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்படி தொழிற்சங் சம்மேளத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் திரு என்றிக் பஸ்போறினோ இத்தந்தியை அனுப்பியிருந்தார்.

### ஜே. ஆர். பதில்

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா திரு. பஸ்போறினோவுக்கு எழுதியுள்ள பதில் வருமாறு:

28-ம் திகதி நடைபெறவுள்ள உத்தேச வேலைநிறுத்

(10-ம் பக்கம் பார்க்க)

யாழ். வளாக "ருக்கிங்"
## 32 மாணவருக்கு தடையுத்தரவு!
### ஆண்கள்-22 பெண்கள்-10

(கோண்டாவில்)

இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாக மருத்துவ பீடத்தில் புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களை 'ருக்கிங்' செய்த 32 பழைய மாணவர்கள் தற்காலிகமாக வகுப்புக்களிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

22 ஆண்களுக்கும் 10 பெண்களுக்குமே இவ்வாறு தடைஉத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை யாழ்.வளாகத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நேற்று வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆகஸ்ட்பாதம் யாழ் வளாக மருத்துதபீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட புதிய மாணவர்களை கைதடி மருத்துவ பீடத்தில் 'ருங்கிங்'செய்ததற்காகவே இவர்களுக்கு இப்போது தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு வாரம் முதல் 3 வாரம் வரை இவர்கள் வகுப்புகளுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஏனைய வளாகங்களுக்கு யாழ். வளாகம் முன்மாதிரி
### மாணவர்கள் மத்தியில் டாக்டர் கல்பகே

(கோண்டாவில்)

இலங்கைப் பல்கலைக்கழக யாழ், வளாகம் மற்றைய வளாகங்களுக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழ்ந்துவருகின்றது, இதற்குக் காரணம் இவ்வளாகத்திலுள்ள பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் மிகுந்த அக்கறையுடனும், திறமையுடனும் செயற்பட்டுவருவ தேகாரணமாகும்,

இவ்வாறு உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே நேற்று யாழ் வளாகத்தில் புதிய மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினர்.

யாழ். வளாகத்தில் இவ்வாண்டு அனுமதி பெறும் கலை, விஞ்ஞானபீட மாணவர்கள் நேற்றுத் தமது பெயர்களைப் பதிவுசெய்துகொண்டனர்,

இது தொடர்பாக யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் இராமநாதன் மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் டாக்டர் கல்பகே தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறிதாவது:-

புதிய மாணவர்கள் வளாகத்தில் அனுமதிபெறும்போது பழைய மாணவர்கள் அவர்களை 'ருக்கிங்' செய்து இம்சைப்படுத்தாது அவர்களை அன்புடன் வரவேற்கவேண்டும்.

இதைவிடுத்து பழைய மாணவர்கள் புதிய மாணவர்களை இம்சைப்படுத்தினல் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பேராதனை வளாகத்தில் பெப்ரவரி மாதம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட எட்டு மாணவர்கள் எட்டுப்பேர் ஏனைய மாணவர்களையும் வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டியதால் இதுபற்றிய விசாரணைகளின் பின் அவர்கள் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் ஒரு குழுவினுல் விசாரிக்கப்பட்டு பல்கலைக்கழகத்திலிருந்து முற்ருக நீக்கப்பட்டுவிட்டனர்.

(10-ம் பக்கம் பார்க்)

### மாணவி மயக்கம்

[கோண்டாவில்]

யாழ் வளாகத்தில் புதிதாக அனுமதிபெற்று தமது பெயரைப்பதிவு செய்து கொள்வதற்காக நேற்று யாழ் வளாகத்திற்கு வந்த மாணவி ஒருவர் சிரேஷ்டமாணவர்களால் கேலி செய்யப்பட்டபோது மயக்க முற்ருராம்

இது குறித்து யாழ் வளாகத்தலைவருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது [இ]

### தமிழ் தொழிற்சங்க
## கூட்டணியின் கோரிக்கையை கூட்டுக் கமிட்டி ஏற்றது

[கொழும்பு]

இம்மாதம் 28-ம் திகதி நடைபெறஉள்ள உத்தேச அடையாள வேலைநிறுத்தம் தொடர்பாக தமிழ் தொழிற்சங்ககூட்டணி தொழிற்சங்கங்களின் கூட்டுக்கமிட்டிக்கு சமர்ப்பித்த இருகோரிக்கைகளையும் கூட்டுக்கமிட்டியின் செயற்குழு ஏற்றுள்ளதாக தொழிற்சங்கக் கூட்டணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

இவ்வாறு தமிழ் தொழிற்சங்க கூட்டணிச்செயலாளர் திரு ஐ தி சம்பந்தர் அறிவித்துளளார்

கூட்டுக்கமிட்டியின் இம்முடிவை எழுத்தில் தருமாறு தொழிற்சங்கக் கூட்டணி இப்பொழுது கூட்டுக்கமிட்டியிடம் கோரியுள்ளது என்றுப வேலைநிறுத்தம் தொடர்பாக ஒரு விரிவான அறிக்கையை இம் மாதம் 25-ம் திகதிக்கு பின்னர் தமிழ்த் தொழிற்தொழிற்சங்கக் கூட்டணி வெளியிடவுள்ளது என்றுப் அவர் தெரிவித்துள்ளார் [ம-இ]

# வாரியார் இப்படிச் சொல்லலாமா?

அநீதிகளை, தவறுகளைக் கண்டுவிட்டால் எழுத்தாளனுடைய உள்ளத்தில் ஒரு அரிப்புத் தோன்றுகிறது. அதைப் பற்றி ஏதும் எழுதாமல் இருந்தால் அந்த அரிப்பே அவனைத் தின்றுவிடும்போல் இருக்கும்.

எனக்கும் இப்போது இந்த மாதிரியான ஓர் அனுபவம்.

சமீபத்தில் திருமுருக கிருபானந்தவாரியாருடைய சொற்பொழிவுகள் கொக்குவிலில் நடைபெற்றன-சனமோசனம்! வாரியாருடைய சொற்பொழிவுகளை கேட்கவென்று வந்திருந்தவர்களைவிட ஒருவித கவர்ச்சியினால் இழுக்கப்பட்டு வந்தவர்களே அதிகம் என்று தோன்றுகின்றது.

வாரியாருடைய வாக்கு வல்லமை ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. பல நூற்றாண்டுக்ளுக்கு ஒருமுறை ஒருவரிடந்தான் இத்தகைய வாக்குச் சாதுரியத்தைக் காண முடியுமென நினைக்கின்றேன்.

அவர் படிக்காத புராண, இதிகாச, இலக்கியங்களே இல்லையென்று தோன்றுகின்றது. இவற்றைவிட, உபகதைகள், பழமொழிகள், பாமர ரஞ்சகமான விஷயங்கள்-எல்லாமே அவருக்குத் தெரிந்திருப்பது மட்டுமல்ல: வேண்டிய வேண்டிய நேரங்களில் அவருடைய வாக்கிலிருந்து அவை தரிசனம் கொடுப்பது ஒரு மகத்தான சாதனை தான்!

வாரியாரை ஒரு 'மகாத்மா' என்று சொல்ல எனக்கு அறிவு போதவில்லை என்றாலும் அவர் ஒரு 'பெரியவர்'-ஒழுக்கசீலர் என்று சொல்ல முடிகிறது.

அந்தமாதிரி அவரிடம் ஒரு மதிப்பு எனதுள்ளத்திலே இருக்கின்றபடியால்தான் அவருடைய சில தவறான கருத்துக்களைப் பொறுக்கமுடியாமல் நெஞ்சு அரிக்கிறது.

ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிடுகிறேன்.

அவர் சொன்ன ஒரு 'கதை'யின் சாராம்சம் இது; யாழ்ப்பாணத்திலிருந்து ஒருவர் விமானத்தில் திருச்சிக்குப் போனார். அங்கிருந்து ரயில்

**வரதர்**

ஏறி சென்னை எழும்பூர் சென்றார். ரயிலில் அவருக்குப் பக்கத்தில் ஒரு வடநாட்டு 'சேட்'டும் பயணம் செய்தார். யாழ்ப்பாணத்தவர் எழும்பூரில் இறங்கி ஒரு ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கினார். அறைக்குள்ளே போனதும் தமது பெட்டியைத் திறந்து பார்த்தார்.

போச்சு! பெட்டி மாறி விட்டது!

அவரோடு ரயிலில் உடன் பயணஞ்செய்த 'சேட்'டின் பெட்டி இவரிடமும், இவரது பெட்டி 'சேட்'டிடமும் மாறி விட்டன. இவரிடம் அகப்பட்ட 'சேட்'டின் பெட்டியைத் திறந்து பார்த்தால், அதற்குள் இவருக்கு உபயோகமான உடுப்புகளோ வேறு பொருட்களோ எதுவுமிருக்கவில்லை.

'ஓ, முருகா! மோசஞ் செய்துவிட்டாயே. வாரியார் சாமியின் பேச்சை நம்பி-[illegible] உன்னுடைய திருப்பணிக்கு ஆயிரம் ரூபா கொடுத்தேனே! அதற்குக்கைமாறு இதுதானா!' என்று அந்த மனிதர் ஒப்பாரி வைத்துப் புலம்பினார்.

பிறகு—

அங்கு 'அற்புதம்' நடந்தது!

அந்த யாழ்ப்பாணத்து மனிதர் ஆத்திரத்தோடு 'சேட்'டின் பெட்டியைக் கவிழ்த்துக்கொட்டினார். பெட்டியின் அடியிலே உடுப்புகளுக்குக் கீழே ஒவ்வொன்றும் நூறு கொண்ட நூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக நூறு கட்டுகள் கிடந்தன!

('அப்படியானால் மொத்தம் எத்தனை ரூபா?' என்று கேட்கிறார் வாரியார். 'பத்து லட்சம் ரூபா' என்று முன்னாலிருந்த சிறுவர்கள் கத்துகிறார்கள். 'பேஷ், பேஷ் கெட்டிக்காரப் பையன்கள்!' என்று வாரியார் உற்சாகப்படுத்துகிறார்.)

வாரியார் சொல்கிறார்:

'ஆயிரம் ரூபா முருகனின் திருப்பணிக்குக் கொடுத்தவருக்கு பத்து லட்சத்தை முருகன் அள்ளிக்கொடுத்திருக்கிறான். பத்தாயிரம் ரூபா திருப்பணிக்குக் கொடுத்திருந்தால் என்ன கிடைத்திருக்கும்? ('ஒரு கோடி ரூபா' என்று சிறுவர்கள் பதில் சொல்கிறார்கள்.)

அந்த முருக அன்பர் தமக்குக் கிடைத்த பத்து லட்சம் ரூபாவை அப்படியே கொண்டு வந்து தமது மனைவிக்குத் தெரியாது இரும்புப்பெட்டியில் பூட்டிவைத்தார்-

வாரியாருடைய கதை இந்த அளவிற்கு வந்ததுமே எனக்கு நெஞ்சுக்குள் ஏதோ உதைக்கத்தொடங்கிவிட்டது.

அந்த முருக பக்தருக்குக் கிடைத்த பத்து லட்சம் ரூபா அவருடைய சொந்தச் சம்பாதியமில்லை. இன்னொருவருடைய சொத்து. சரியாகச் சொன்னால் அது ஒரு திருட்டுச் சொத்து! பாவம், அந்த 'சேட்' தான் இழந்துவிட்ட பணத்தினால் என்னென்ன கஷ்டப்பட்டாரோ!

இந்த முருக பக்தர் உண்மையாக ஒரு நல்ல மனிதராக இருந்தால் என்ன செய்திருக்கவேண்டும்? தன்னுடைய சக்திக்கு முடிந்தவரை அந்த 'சேட்'டைக் கண்டு பிடித்து இந்தப் பணத்தைக் கொடுத்திருக்கவேண்டும். அப்படிமுடியாவிட்டால் பொலிஸ் நிலையத்தில் பணத்தைக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு பொறுப்பை அவர்களிடம் விட்டிருக்கவேண்டும்.

அந்த மாதிரி ஒன்றும் செய்யாத இந்த பக்தசிரோமணி 'ஆகா, நான் ஆயிரம் கொடுத்ததிற்கு முருகன் பத்து லட்சமாகக் கொடுத்திருக்கிறானே!' என்று ஆனந்தப்பட்டிருந்தாரென்றால் அந்த மனிதரைப் பற்றி என்ன நினைப்பது? அவருடைய கதையைக் கேட்டவர்கள் மனத்தில் அவரைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்திய வாரியார் சுவாமிகளை என்ன

(9ம் பக்கம் பார்க்க)


## குஷிபா டிஸ்ரிபியூட்டர்ஸ் லிமிரட்.

செல்வச்சந்நிதி தீர்த்தத் திருவிழாவன்று மாவிட்டபுரம் குஷிபா விற்பனையாளர்களால் கோயில் வீதியில அதிஷ்டம் பார்க்கப்பட்ட பரிசுக்குரிய சிட்டைகளின் இலக்கங்கள் :

| | | ஆறுதல் பரிசுகள் | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | 4416 | 3548 | 4323 |
| 2-ம் ,, | 3452 | 4244 | 4305 |
| 3-ம் ,, | 3528 | 3082 | 3468 |
| 4-ம் ,, | 4414 | 4537 | 4544 |
| 5-ம் ,, | 4384 | 4078 | 4235 |

(0404)

## பதவி வெற்றிடங்கள்

1. விற்பனைப் பிரதிநிதி
2. கட்டிட மேற்பார்வையாளர்
3. வான் சாரதிகள்

அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்களுடன் 30-9-1978க்கு முன் விண்ணப்பிக்கவும்.

மனேஜர்,
குஷிபா (டிஸ்றிபியூற்றர்ஸ்) லிமிட்.,
கிளை : இல. 2,
மாவிட்டபுரம். 0409

## அறிவித்தல்

### இரணைமடுக்குளம் நீர்வரி ஏடுமீளச் சீர்படுத்தல்

இரணைமடுக்குளம் நீர்வரி ஏடுமீளச் சீர்படுத்தல் 27-9-78 முதல் 27-10-78 வரை குஞ்சுப்பரந்தன், முரசுமோட்டை, உருத்திரபுரம், வட்டக்கச்சி, இராமநாதபுரம், கிளிநொச்சி காணிக்கந்தோர் ஆகிய இடங்களில் நடைபெறும்; இக் குளத்தின் கீழ் விவசாயம் செய்பவர்கள் குறித்த இடங்களில் தமது உறுதிச் சீட்டுடன் சமூகமளித்து வேண்டிய திருத்தங்களைப் பதிவுசெய்து கொள்ளவும். நீர்வரி இடாப்பில் பதியப்படாவிட்டால் அம்மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பதிவுசெய்யத் தவறுபவர்கள் குளத்துநீர் கமத்துக்குப் பெறமுடியாது.

அரசாங்க அதிபர்
0403 யாழ்ப்பாணம்.

## விளம்பரம்

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விவசாயிகளுக்கு விற்பனையாகவிருக்கின்றன. இதற்கான கேள்வி விண்ணப்பங்கள் யாவும் சங்கத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்டு, முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 27-9-78 புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு முன்னதாகச் சங்கக் காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்படவேண்டும். விண்ணப்பப்பத்திரத்திற்கான வைப்புப்பணம் ரூபா 500/-ஆகும்.

இங்ஙனம்
ந. செல்லத்துரை,
பொதுமுகாமையாளர்
அளவெட்டி-மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்.
0379

## வரி விளம்பரம்

### தேவை

மாகோ நகரில் அமைந்திருக்கும் முருகன் கோவிலுக்கு ஓர் அர்ச்சகர் உடனடியாக தேவை. இருப்பிட வசதியுடன் மாதம் 150 ரூபாவிற்கும் 200 ரூபாவிற்கும்இடையில்ஊதியம் கொடுக்கப்படும். பிறவருமானங்களும் உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: வ. பெரியதம்பி, ராஜா கிறைன்டேஸ், மாகோ. 0374

பனை ஓலைப் பொருட்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு, பனை ஓலையால் இழைக்கப்பட்ட தரமான பெட்டிகள், சிறிய பாய்கள், பைகள் முதலிய பொருட்கள் பெருந்தொகையாக கிரமமாக தேவைப்படுகின்றன. இப்பொருட்களை விற்க விரும்புவோர் மாதிரிப் பொருட்களை (Samples) அக்டோபர் மாதம் 8-ம் திகதி காலை 9 மணிக்கும் 11 மணிக்குமிடையில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு கொண்டுவரவும்.
இல: 153/2, கஸ்தூரியார் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 0399

ஆங்கில அறிவுள்ள லிகிதர் தேவை. பிணைப்பணம் கட்டக் கூடியவராக இருத்தல்வேண்டும். 27-9-78 க்கு முன் விண்ணப்பிக்கவும். யாழ்ப்பாணத்தில் வசிப்பவராயும், தட்டெழுத்து தெரிந்தவராயுமிருத்தல் விரும்பத்தக்கது. திருச்செல்வம் அன் கொம்பனி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0405

என்வலப்புகள் தயாரிப்பதற்கு பெண்கள் தேவை. உடன் நேரில் வரவும். தீபா தயாரிப்பு, 47, இராசாவின் தோட்டவீதி, யாழ்ப்பாணம். 0406

நல்ல சுற்றாடலில், மூன்று அல்லது நான்கு படுக்கை அறைகள் கொண்ட சகல நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. யாழ் நகரில் இருந்து நான்கு மைல் சுற்றாடலில பருத்தித்துறை வீதி, பலாலி வீதியில் உள்ளது விரும்பத்தக்கது. தொடர்பு: மனேஜர், ஹவுஸ் அன்ட் புறொப்பர்ட்டி ட்ரேட் லிமிட், 3, நவீனசந்தை, யாழ்ப்பாணம். 0387

### விற்பனைக்கு

45 கலன் பழைய வெற்று பரல் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்: மல்ரி ஓயில் இன்டஸ்றீஸ் லிமிட்டெட், கே. கே. எஸ். வீதி, ஆஸ்பத்திரியடி, இணுவில். தொலைபேசி: 339 (சுன்னாகம்) 0398

National Panasonic Tape Recorder (R Q 309DS) புதியது விற்பனைக்குண்டு. 32, கைலாச பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர். 0408

கலப்பற்ற அல்சேஷன் குட்டிகள் உண்டு. [இனவிருத்திக்கான சிறந்த ஆண் நாய்களும் உண்டு.] க. நடேசன், 15, மலர்மகள் வீதி அரியாலை. 0395

### வாடகைக்கு

கொட்டடி ஆஸ்பத்திரி றோட், லேடன் கொம்பனிக்கு அருகாமையில்இருக்கும் பாபர் சலூனை தளபாடங்களுடனோ, வெறும் கடையாகவோ வாடகைக்கு கொடுக்க இருப்பதால் விரும்புவோர் கே. கே. எஸ். றோட். 05-ம் நம்பர், ஸ்ரீபத்மநாத ஸ்ரோரில் விபரங்களை அறியவும். 0389

### CLASSES

Cookery and Mordern Cake decoration classes by highly qualified and experienced teachers. Commencing 1st October. 'Vims' 14, Clock Tower Road, Jaffna. 0400

Short-hand, Typewriting Classes in English. Commencing 1st October. Apply 'Vims', 14, Clock Tower Road, Jaffna. 0401

### பயிற்சி

(Electric & Gas) எலக்ரிக் காஸ்வெல்டிங், லேத்இயக்குநர் (Lathe operator) மூன்று மாதகால அடிப்படை பயிற்சி வகுப்புக்கள் அக்டோபர் மாதம் முதல் நடத்தப்படும். பயிற்சிக்காலத்தில் திறமையான தகுதியுடையோருக்கு பயிற்சியின் பின் இலவசமாக தொழிற்சாலையில் மூன்று மாதகாலம் விசேட பயிற்சி அளிக்கப்படும். அனுபவமிக்க பொறியியலாளர்கள் பயிற்சி வகுப்புக்கள் நடத்துவார்கள். 30-9-78-ற்குமுன் விண்ணப்பிக்கவும். இன்டஸ்றியல் என்ஜினியரிங் இன்ஸ்ரிரியூட், C/o ராதா மெஷின் கம்பனி, 95 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0375

### சேவை

உங்களுடைய எல்லாவித இறக்குமதி செய்யும் சரக்குகளை உடனுக்குடன் கவனித்து துறைமுகத்திலிருந்து பாதுகாப்பாக உங்கள் பண்டகசாலைக்கு கொடுப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும். இறக்குமதி செய்ய விரும்புவோர்க்கு ஆலோசனையும் வழங்கப்படும் சதாசிவம் வீரவாகு அன் கோ. 270, செட்டியார் தெரு, கொழும்பு 11, தொலைபேசி: 24481. 0393


## முருங்கனில் கோழிநோய்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் பகுதியில் கோழிகளுக்கு ஒருவித நோய் உண்டாகியுள்ளது. இதன் காரணமாக தினமும் ஏராளமான கோழிகள் மடியத்தொடங்கியுள்ளன. சில விவசாயிகள் குறைந்த விலைக்கு கோழிகளை இதன் காரணமாக விற்கத் தொடங்கியுள்ளனர். (அ)


இப்பொழுது வாங்கலாம்

பிரவுண்சனின் இன்னுமோர் தரமான தயாரிப்பு
பிரவுண்சன் அரறூட்மா

இறக்குமதிசெய்து விநியோகிப்பவர்கள்:
பிரவுண்சன் இண்டஸ்ரீஸ்
80 1/4 பிறைஸ் பிளேஸ்
கொழும்பு 12.
தொலைபேசி: 27197




பிரவுண்சன் அரறூட்
அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.



# உணர்வுகளால் வாழும்வழி-?

செங்கதிர்

வேகமாக வீசும் சாற்றில் அடிபட்டு மேகக்கூட்டங்கள் விரைந்து கொண்டிருப்பது குடிசைக்குள் படுத்துக் கிடக்கும் எனக்குக் கூரையினூடே தெரிகிறது

ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்த களிப்பாலும் அல்ல-களைப்பாலும் அல்ல - பசியால் வதங்கிப் போய்ப் படுத்துக் கிடக்கின்றேன் பாலைவனத்தில் பூஞ்சோலையை எதிர்பார்க்க முடியாது. என்பது எனக்குத் தெரியும், ஆனல், இரண்டு வயதே நிரம்பிய ஏழாவது பிள்ளைக்கு அது எப்படிப் புரியும்?

''ம்மா! - பசிக்குது'' என் செல்வமகள் முனகுகிருள். பிஞ்சு வயிறு பற்றியெரியக் கெஞ்சும் அவள் பாவனை மிஞ்சி நிற்கும் என் பஞ்சத்தைக் குத்திக் காட்டியது. இல்லையென்று தெரிந்தும் அவள் நெஞ்சை நோக்கி வாஞ்சையாடு முகம் கவிழ்க்கிருள் அவளின் எண்ணம் எனக்குப் புரிந்ததால் அவளின் நோக்கத்துக்கு என்னையறியாமலேயே என் கைகள் வசதி செய்து கொடுக்கின்றன.

மூலைக்குள் ...... நேற்ருேடு படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்ட ஐந்தாவது பையன் சுருண்டு படுத்துக் கிடக்கிறன். படிக்க அனுப்பவில்லையென்று அவனுக்கு என்மேல் கோபமாம், இரண்டு வருடங்களுக்கு முன் வயதாகிவிட்ட என் மகளுக்கு என்ன கோபமோ? அவள் என்னை வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்கிருள்.

எனக்கேன் உண்ண
உணவில்லை?......
எனக்கேன் உடுக்க
உடையில்லை?......
எனக்கேன் ஒரு வீடில்லை?
என் பிள்ளைக்ளுக்கு சரியான
வசதி

என்னல் ஏன் செய்துகொடுக்க முடியவில்லை?

நான்தான் கேட்கின்றேன்? என்னைத்தான் கேட்கின்றேன். எனக்கு விளங்கவில்லை.

கிறேன். எனக்கு ஒன்று விளங்குகிறது.

என்னைப்போல உள்ளவர்களுக்குப் பிள்ளைகூட இருந்தாலென்ன? கஷ்டம் கஷ்டம் தான்; ஏழு பிள்ளைகளுக்குக் கஞ்சி கொடுக்க முடியாமல் நான் தவிக்கிறேன். ஒரே பிள்ளையைக் காப்பாற்ற முடியாத கண்ணம்மா விசரியாகத் திரிகிருள். கண்ணம்மாவும் நானும் இப்படி அல்லல்படும் போது, பன்னிரண்டு பிள்ளைகளையும் வசதியாக வளர்த்துக் கொள்ள பேரம்பலத்தால் எப்படி முடிகிறது? அவரால் அப்படி வாழ முடியும்போது எங்களால் வாழ முடியாமல் இருப்பதற்குரிய இரகசியம் என்ன.

எனக்குத் தலை இடிக்கிறது. கன்ன நரம்புகள் விண்விண் என்று துடிக்கின்றன. என்றுமே இல்லாதவாறு நான் என் நிலைபற்றிச் சிந்திக்கிறேன். தலையிடி என்று அந்த யோசனையில் இருந்து நழுவப் பார்த்தாலும்கூட பாழாய்ப் போன மனசு வேணுமென்றே அந்த விஷயத்தை மையமாக வைத்துத்தான் சுழல்கிறது.

என்னென்னவோ சிந்தித்துவிட்டு என் வயதுவந்த மகளைப் பார்க்கிறேன். அவள் ...அவள் ... ஓ!- அவள் எங்கே! ''வசந்தி!... வசந்தி!... எடியே வசந்தி!... ''உரத்து ஒலித்தது என் குரல். குடிசைக்குள் என் கண்கள் வேகமாகச் சுழன்றன. உஹூம்! நாலைந்து அறை இருந்தால், நாலைந்து கதவு திறக்க வேண்டும். மேல் மாடி ஒன்று இருந்தால் இருபது இருபத்தைந்து படிகள் ஏறி இறங்க வேண்டும். பாத்ரூம் ஒன்று கிடந்தால் ஒரு தடவையாவது நுழைந்திருக்க வேண்டும். என் குடிசையினுள்ளே இவை எல்லாமா இருக்கின்றன. குடிசையை விட்டு வெளியே றினேன். இருட்டா அது-! ஓ-! அது தான் இருட்டு. கும்மிருட்டு! எனது வாழ்க்கையைப் பால ஒரே இருட்டு.

வசந்தி! எங்கே போயிருப்பாள்- கார் மேகக் கூட்டங்களினடையே விசியது 'பளிச்' என்று ஒரு மின்னல் அது வெளியே அல்ல. இருண்ட எனது மனதுக்குள்ளே, என்ன தான்! நேறறு அவள் என்னைக் கேட்ட நியாயபூர்வமான கேள்விகள் என்மனதில் நிழலாடி என்னை அச்சுறுத்துகின்றன.

விளங்கவே இல்லை எனக்கு இரண்டு பிள்ளைகள் மட்டும் இருந்தால்......?

என் யோசனைக்கு மூன்ரும் வீட்டுக் கண்ணம்மாவின் கதை தடைவிதிக்கிறது. கண்ணம்மாவுக்கு ஒரே ஒரு குழந்தைதான். ஆனலும் அந்தக் குழந்தையை அவளால் காப்பாற்ற முடியவில்லையே! ஏற்புவலியால் அவஸ்தைப் பட்ட அந்தக் குழந்தைக்கு ஊசி மருந்தைக் கொடுத்திருந்தால்......?

அந்தக் குழந்தை செத்திராது! அது செத்துவிட்டது என்று தெரிந்தபோது அவளைத் திட்டினேன். ஓ-! திட்டினேன்! அவளால்தான் அந்தப் பிள்ளை இறந்தது என்று சாவு வீட்டில் இருந்து கொண்டே உளறினேன். அதன்மேல் எனக்குக்கொள்ளை ஆசை......பாசம். அந்தத் தவிப்பு என்னைப்பேச வைத்தது. நான் பேசியதில் தப்பில்லை அவள் மருந்து எடுத்துக் கொடாதது தப்பா?

பிரேதத்தைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றபோது விசரிமாதிரி நின்று பேயாக அவள் அலறியது என்னை விறைக்க மட்டுமா செய்தது. என்ரை ராசாத்தி, ஐந்து ரூபாக் காசிருந்தால் உன்னைச் சாகவிட்டிருப்பேனடி?'. எனக்கு மெய் சிலிர்த்தது-சிலிர்க்கிறது. என் பிள்ளையை இறுக இழுத்து ஆதரவாக அணைக்

எங்கேயோ என் கால்கள் விரைகின்றன. என் மனம்? ''அம்மா உண்மையாகவே நான் வயதுக்கு வந்துவிட்டேனென்ரு என படிப்புக்குமுழுசுப் போட்டாய்? உன்னல் பள்ளிகூடத்துத் தவணைக்காசு கட்ட முடியவில்லை. அது தான் காரணம். அதற்கு நீசொன்ன சாட்டு. நான் பெரியவளாகிவிட்டேன். என்பதுதான்; என்னை விடு! தம்பியை ஏன் உன்னல் படிப்பிக்க முடியாமல் இருக்கின்றது? ஏழு பிள்ளைகளில் ஒரு பிள்ளையயாவது உன்னல் படிக்கவைக்க முடியவில்லை. பன்னிரண்டு பிள்ளைகளையும் பேரம்பலம் எப்படிப் படிக்க வைக்கிருர்? எங்களால் ஏன் முடியவில்லை? வகுப்பில் முதலாம் பிள்ளையாக வந்தபிறகும் என்திறமையில் உனக்குச் சந்தேகமோ? அந்தத் திறமை எல்லாவற்றையும் அடகு வைத்துவிட்டுக் கூலி வேலை செய்யவேண்டுமென்று ஒரு நியதி இருக்க நான் கதைத்தால் ஏழு பிள்ளை பெற்ற எனக்கே புத்தி சொல்லுகிருய்! என்று பேசுவாய் முடியுமானல் நான் கேட்ட கேள்விகளுக்கு மறுமொழி சொல்லு பார்ப்போம்!'' வசந்தி ஆத்திரமாகக் கேட்டாள்' அழுது அழுது கேட்டாள்,

நேற்று அவள் சிந்தனையில் எழுந்த கேள்விகள் இன்று என்னைச் சிந்திக்க வைக்கின்றன. எனது சிந்தனைகள் நாளைக்கு -? நியாயமும் நீதியும் உள்ள சிந்தனைகள்தான சமூகமொன்றை விழிப்படைய வைக்கிறது,

''அம்மா - தம்பியை உன்னல் படிக்க வைக்க முடியாவிட்டால் என்னுடைய உடம்பை அணுஅணுவாக ஒழித்துச்சரி நான் படிக்க வைப்பேன்.'' வசந்தி சொன்ன அந்தச் சொற்கள்தான் என்னை அச்சுறுத்துகின்றன. எப்படியோ அந்தக் கடைவீதியை வந்தடைந்துவிட்டேன். கண்டிரேட்டும் பள்ளிக்கூடத்தெருவும் சந்திக்கும் வலதுபக்க மூலையில் அமைந்துகிடக்கும் சுருட்டுக் கடைக்கு முன்பாக இருவர் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவன் சுருட்டுக்கடையில் வேலை செய்யும் கன்னத்துமயிர் வளர்த்த பையன், மற்றவன் அவன் சிநேகிதனகத்தானிருக்கும்.

''ராஜு'' ... ... உதிலை போனவளைக் கவனிச்சியோ?...

''சிவப்பு நீளப் பாவாடை தானே?

''ம்...... புதுக் காரொன்று வாடகைக்கு வந்திருக்கிறது'' கன்னத்து மயிர் வைத்தவன் கொண்டவனின் கதை என் காதில் விழுகிறது... சிவப்பு நீளப்பாவாடை... வசந்தியும் அப்படி ஒரு பாவாடைதனே கட்டியிருந்தாள்? அப்படியென்ருல்...?...... புதுக் கார் வாடகை...... சிவப்புப் பாவாடை......

எனக்கு வியர்த்துக் கொட்டுகிறது. என் கால்கள் அசைய மறுக்கின்றன. நான் அந்த இடத்தைவிட்டு நகரவே இல்லை! ''அந்தச் சிவப்புப் பாவாடை அந்த முடிவுக்கு வரவேண்டிய அவசியம்என்ன? வாழ வசதி இல்லை, வேகிற உடல் வெதும்பிப் போகட்டுமே என்று இரவு ராணியாகி விட்டாள். அவள் இராணியானதற்கு மேலோட்டமான காரணம்தான் இது. அடிப்படையான காரணம். அடிக்கடி சொல்லுவேனே அது தான். ஒரு சமூகத்தின் பொருளாதாரத்தை ஒரு பிரிவு மட்டும்தான் அனுபவிக்கிறது. அந்தப் பொருளாதாரம் பரவலாகிப் பலரும் சரிசமமாக அனுபவிக்கின்ற ஒரு நிலை உருவாக வேண்டும். அந்த நிலை உருவாகினல் பங்களாவில் ஒரு வகுப்பும் குடிசையில் இன்னெரு வகுப்பும் வாழ வேண்டிய நிலைமை இருக்காது ஒவ்வொருவரினதும் வாழ்க்கைத் தரம் ஒரேயளவினதாக ஒரே தரத்தினதாகஇருக்கும். அந்த நிலைமை இங்கு உருவானல் இந்தச் சிவப்புப் பாவாடை இந்த நிலைக்கு வரவேண்டிய அவசியம் இருந்திருக்காது.

கன்னத்துமயிர் வளர்த்த பையன் சொல்லதெல்லாம பச்சை உண்மை. என் கால்கள் தன்னிஷ்டப்படி நடக்கின்றன. ஆஸ்பத்திரிக்கு முன்பாக என் மகள் நிற்கிருள். பணத்திற்காக எதையும் இழக்கத் துணிந்த நிலையில் நிற்கிருள். ஒரு வெறி நாயின் வரவை எதிர்நோக்கி நிற்கிருள்.

அவள் என் வரவை நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. என்னை அவள் சந்தித்தபோது ஓங்கி அறைந்தேன். ''வாழத் தாண்டி வேணும்! மானத்தோடு வாழ்க்கை இல்லாவிட்டால் மானமாவது இருக்கும். மானத்தையே இழந்தால் வாழ்க்கை இருந்தென்னடி பலன்? எடியே? வாழ வழி இல்லாதபோது வாழ்வதற்கு வழி இதுதானென்ருல் என்னைப்போல உள்ளவர்கள் எல்லாரும் இந்த நிலைமைக்குத் தாண்டி வரவேணும். தெரியாமல்தான் கேட்கிறேன். இப்படி வாழ்கிறவர்கள் எல்லோரும் பேரம்பலத்தைப்போலவா வாழ்கிருர்கள்?'' என்றேன் ஆத்திரத்தோடு

அவள் அழுதாள் ஓ...... வென்று அழுதாள், வாழக்கையில் தவருத ஒரு மகளை அணைத்தேன். வாழ என்ன வழி என்று விசும்பியபடி அவள் கேட்டாள். கன்னத்து மயிர் வளர்த்த சுருட்டுக்கடை பையன் கூறியவற்றை என் மகளுக்கு நான் சொல்லுகிறேன்......

நேர்வழி உள்ளபோது குறுக்குவழி நாடியவளின் முகம் வெட்கத்தால் சிவக்கிறது.

(யாவும் கற்பனை)

# சிவாலய வழிபாடு வாழ்க்கையின் சீவநாடி

தேவர்களுக்குப் புலவர்கள் என்றும் பெயர். புலம்—அறிவு. அசுரசக்தி மேலிடும்போது புலவர்களாகிய தேவர்கள் தம் நிலையை அறிந்து தவம் மேற்கொள்ளவர். இதனைக் கந்தபுராணத்திற் படிக்கின்ரும.

உற்றநோய் நோன்றல்
உயிர்க்கு உறுகண்
செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

என்பது திருவள்ளுவர் வாக்கு. அவ்வாக்கு நாமெல்லாம் தவம் செய்து உய்யும்பொருட்டு வழி காட்டுகின்றது. இரட்டை வழி; இராசபாதை.

முதலாவது வழி:உற்றநோய் நோன்றல். நோன்றல்—பொறுத்தல்.

நமது துன்ப அநுபவங்களுக்கு நாமே கருத்தா. நமது சம்பாத்தியங்களை நாம் மனம் ஒத்து அநுபவித்தல்வேண்டும். பிறர் வெறுங் கருவிகள் பிறரை நோவது எய்தவனிருகக அம்பை நோவதாம்

பிறரை நோதல், தெய்வத்தைத் திட்டுதல், மேலும் வினையைக்கூட்டுவதாம். துன்ப அநுபவ பொறுக்கமுடியாதாயில், சாங்கமுடியவில்லையே என்று தெய்வததை வேண்டலாப். பிறரையோ, தெய்வத்தையோ நோதல் மகா மகா தவறு.

தவத்தின் இரண்டவதுவழி: 'உயிர்க்கு உறுகண் செய்யாமை.' உறுகண்—துன்பம்.

நமது வாழ்க்கைபிறஉயிர்க்கு துன்பம விளையாமல் அமைதல்வேண்டும்.

மனத்தால், வாக்கால்,செயலால் மற்றை உயிர்க்குத் துன்பம் விளையுமானல் அது நம் வாழ்க்கையைப் பாழ்செய்து விடும்.

துன்புறுவோன், தன்வினை தன்னைச்சுட்டது என்று பரிகாரம்கண்டு சாந்தியுறுவன்.

துன்புறுத்துவோனுக்குப் பரிகாரமேயில்லை. பெரியோர்கள் துன்புறுத்துவோன் நிலைக்குத் தான் பரிதாபம் உறுவர்.

துன்புறுத்துவோன் எடுத்த பிறப்பைப் பாழ்செய்வதன்றி மேலும் எண்ணிறந்த பிறப்பைப் பாழ்செய்கின்ருன்

ஓர் உயிரைத் தண்டிக்க இறைவனைத்தவிர எவன் ஒருவனுக்கும் அதிகாரமில்லை.

இரண்டு அம்சங்கள் கொண்ட இத்தவத்தை யாவரும் தலைமேற்கொண்டு உய்தி கூடக் கடவர்.

முனிவர்கள் திருவருளின் சாயலின் சாயலைச்சிறிய அளவுக்கயினும் எட்டலாம். திருவருளை எட்ட எட்டச் சுற்றுடல் தன் விஷயத்தில் சாந்தமுறுவதைக் காணலாம். பகை நெகிழ்ந்துவிடும்.

முனிவர்கள் திருவருளை நேரே அணுகுபவர்கள் அவர்கள காட்டுக்குள் எறிகுண்டோ துவக்கோ வைத்திருப்பதில்லை. தர்ப்பைக் கட்டுமாத்திரம் வைத்திருப்பார்கள்.

ஓமம் வளர்க்கும் போது, கரடிகள் விறகொடித்து ஓமத்திலிட்டுத் தொண்டுசெய்யும் புலிகள் பூனைகளாய்விடும்.

முனிவர்கள் முன்னிலையில் அவர்கள் பால் உள்ள அருள் அந்த மட்டத்துக்கு துஷ்டமிருகங்களிலும் மேலிட்டு, அவற்

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

நாள்தோறும் எவரையும் நோவாது துன்பத்தை அநுபவித்தலிலும், மற்றெரு உயிருக்குத் துன்பம் விளையாமல் நடத்தலிலும் பரிசோதனங்கள் நடத்தித் திருத்தங்களை நமது வாழ்க்கையில் மேற்கொள்ளல்வேண்டும்.

படுக்கைக்குப் போகும் போது மூன்று நிமிஷம், படுக்கைவிட்டெழும் போது இரண்டு நிமிஷம், மொத்தம் ஐந்து நிமிஷநேரம் மேற்படி சிந்தனைகளுக்கென்று நேரம் ஒதுக்கிவைப்பது மிகமிக முக்கியம்.

தவறுகளைப் பரிகரித்துத் திருத்தங்களுக்குச் சங்கற்பம் செய்துகொள்ளல்வேண்டும்.

இவ்வாறு தத்துவத்தைப் பெருக்கப் பெருக்கத் திருவருறிலுள்ள துஷ்ட குணங்களை அடக்கிவிடும்.

பெரியோர்கள் முன்னிலையிலும், புண்ணிய ஸ்தலங்களிலும், எங்கள் துஷ்டப்போக்குகள் அடங்கி நன்மை மேலிடுவதிலிருந்து, தவத்தாலெய்தும் அருளின் அருமைப் பாட்டை அறியலாம்.

நமது நாட்டில ஒரு காலத்தில் தவம் இருந்தது. திருக்கேதாரத்திலிருந்து, யாழ்ப்பாணத்துக்கெழுந்தருளி நல்லூரில் கைலாசநாதராய மர்ந்த தைவிகலிங்கப்பெருமான், பறங்கிக்காரர் காலத்தில் இந்த மட்டுவிலுக்கெழுந்தருளிச் சந்திர மௌலீசராய்த் திருவருள் பாலித்தருளினர்.

(4ம் பக்கம் பார்க்க)

# தமிழர் வாழ்வின் வற்றுத ஊற்று 'சிந்தனைக் களஞ்சியம்'

காலத்துக்குக் காலம் பண்டிதமணிஐயா பத்திரிகைளுக்கு எழுதி வெளிவந்த பலகட்டுரைகளில் முப்பது கட்டுரைகளை ஒருங்கே திரட்டி பண்டிதமணியின் பாராட்டுவிழாச் சபையினரான அவரது மாணவர்கள் தமது மூன்றுவது வெளியீடாக தாம் பெற்ற இன்பத்தை பிறரும் பெற்றுப் பயனடையும் நோக்குடன் 'சிந்தனைக் களஞ்சியம்' என்றபெயரில் நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

ஆறுமுகநாவலர் வழியில் திருக்கைலாய ஞானபரம்பரை வழிவந்த சனாதன தர்மத்தை நன்கறிந்தவர் பண்டிதமணி. வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை வழியில் இலக்கிய ரசனையையும், உரையாசிரியர் வேற்பிள்ளை வழியில் உரை எழுதும் ஆற்றலையும், சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்வழியில் தமிழ்ப் புலமையையும், திரு. த. கைலாசபிள்ளை வழியில் கண்டனப் போக்கையும், அளவெட்டி பொ. கைலாசபதி வழியில் ஞானமார்க்கத்தையும் நன்கறிந்தவர் தான் என்பதை பண்டிதமணி ஐயா இந்த முப்பது கட்டுரைகள் மூலம் நன்கு தெளிவுபடுத்திக் காண்பிக்கின்றார்.

வள்ளுவர்பெருமான், வான்மீகி, கம்பர், ஷேக்ஸ்பியர், இளங்கோ, மாணிக்கவாசகர், காரைக்கால் அம்மையார், சேக்கிழார், ஆறுமுகநாவலர், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், அளவெட்டி பொ. கைலாசபதி ஆகியோர்களை அறிமுகம் செய்துவைக்கின்றார் பண்டிதமணி ஐயா. இப்புலவர்களின் உள்ளப் பாங்கை கவிதை விழுப்பத்தினை, சுவை ததும்பும் வகையில் தமது சித்திர வசனங்களால் ஐயா அவர்கள் நயந்து நயந்து காட்டி எம்மையும் தமது ரசனைக்கு இட்டுச்செல்கின்றார்.

களவுநிலை அறம்பொருள் கைவந்தவழி வருவது; இன்பத்தையும் வீட்டையும் எளிதில் தருவது. களவு நிலை கைகூடற்பாலது என்பதை 'தமிழ்' என்னும் கட்டுரையாலும், 'வவவடுநுண்ணயிர்' மூலம் தமிழ் நண்டின் சிறப்பினையும், சிந்தாமணிக் காவிய அழகுகள் உயிரற்ற பிண அணிகள் என்றும், அன்பினைந்திணையின் ஒன்றான 'நெய்தல் திணை'யில் காதல் சிறப்பினை மட்டுமன்றிப் பக்திச்சுவையினை ஊட்டியும், அறிவை ஆரியமொழி வெளிப்படுத்தும் அன்பைத் தமிழ்மொழிவெளிப்படுத்தும் என நிலைநிறுத்தியும், சங்கத்தமிழ், சங்கத்தமிழுக்குப் பின்னையதமிழ், கந்தபுராணச் சைவ பொக்கிஷம், பாரத தாமம், தர்மம், மெய்ச்சமயம் போன்றவைகளைக் கூறும் பண்டிதமணி ஐயா, நளனையும், குசேலரையும் திருமுறைகளையும் நம்மோடு பேசவைக்கின்றார் தம் எழுத்துக்கள் மூலமாக.

பண்டிதமணி ஐயாவின் சிந்தனையின் ஊற்றுக்களஞ்சியமான இச் 'சிந்தனைக்களஞ்சியம்' தமிழர் வாழ்வின் வற்றுத ஊற்றுகச் சுரக்கும் பெருமை பெறுகின்றது.

-அருள்

## புதுயுகம் படைப்போம்!

-கொற்றை. கிருஷ்ணனந்தன்-

நாறுஞ் சமூகத்தின் நாற்றத்தை மாற்றிட
நாமே திரண்டிடுவோம்—வீடு
தோறும் இளைஞர்கள் வாலிபர் யாவரும்
தோழமை யாய்த்திரள்வோம்—பெரும்
பாறை நிலங்களை மாற்றிப் பயன்தரும்
பயிர்கள் வளர்த்திடுவோம்—இங்கு
சேறுஞ் சகதியு மான இடங்களில்—
செந்நெல் விளைத்திடுவோம்!
—புதுயுகம் நாம் படைப்போம்—சொர்க்க
பூமியாய் நாம் அமைப்போம்!

மூலை முடக்கினில் தேங்கும் வளங்களை
மொத்தமா கத்திரட்டி—தொழிற்
சாலைகள் கட்டியே நாளை உலகினில்—
சாதனைகள் புரிவோம்—அந்த
ஆலைகள் தன்னிலே ஆயிர மாயிர
மாகப் பணிபுரிவோம்—அங்கு
காலை முதற்கொண்டு மாலை வரையிலும்
கடினமாய் நா முழைப்போம்!
—புதுயுகம் நாம் படைப்போம்—சொர்க்க
பூமியாய் நாம் அமைப்போம்!

வேலையில் லாததால் வீட்டினிற் காலத்தை
வீணய்க் கழித்திடுற—நம்
வாலிபத் தோழரின் வாட்ட நிலைமைக்கு
வழிகள் சமைத்திடுவோம்!—தொழிற்
சாலையிலும் வயற் காணியிலும் தொழிற்
சாதனங்கள் அமைத்தே—இங்கு
வேலைகள் இல்லையே என்றிடும் ஏக்கத்தை
விரட்டி அடித்திடுவோம்!
—புதுயுகம் நாம் படைப்போம்—சொர்க்க
பூமியாய் நாம் அமைப்போம்!

கஞ்சிக்கு ஏழைகள் கலங்கித் தவிக்கின்ற
காட்சிகள் இங்கு இல்லை—பெரும்
பஞ்சம் வதைத்திட மக்கள் மடிவுறும்
பரிதாப நிலையுமில்லை—இங்கு
வஞ்சனை யாய்ப்பொருள் திருடி வயிற்றை
வளர்ப்பவர் தானுமில்லை—தங்கள்
நெஞ்சம் நிறைந்துநல் நிம்மதி யாய்வாழும்
நிலைமைதான் உண்டு எனும்—ஒரு
—புதுயுகம் நாம் படைப்போம்—சொர்க்க
பூமியாய் நாம் அமைப்போம்!

புத்த பிரானது புனித மதத்தினுல்
பூமி புகழ் பெறவும்—இங்கு
உத்தமர் யேசு உரைத்த நெறியினுல்
உலகம் உயர்ந்திடவும்—நல்ல
தத்துவங்கள் சொன்ன நபிகள் வழியிலே
தரணி தழைத்திடவும்—முன்பு
சித்தர்கள் போற்றிய சிவனின் அருளினுல்
தேசம் சிறந்திடவும்—ஒரு
—புதுயுகம் நாம் படைப்போம்—சொர்க்க
பூமியாய் நாம் அமைப்போம

ஒருவர் உழைத்திட இன்னெருவர் அதைச்
சரண்டி யெடுத்திடுற—இந்த
மிருகத் தனமான செயல்கள் நிறைந்துள்ள
மேதினி தன்னைவிட்டு—சம
உரிமைகள் பெற்றுநல் லுள்ள நிறைவுடன்
உழைப்பவர் வாழ்ந்திடவும்—மிகப்
பெருமையாய் ஈழநன் ஞட்டினை மற்றவர்
பேசி மகிழ்ந்திடவும்—ஒரு
—புதுயுகம் நாம் படைப்போம்—சொர்க்க
பூமியாய் நாம் அமைப்போம்

(வேறு)

அன்பினுல் அகிலந் தன்னை
அழகுற மாற்ற வேண்டும்!
இன்பமே யன்றி வேறு
எதுவுமே இல்லை யென்று
நன்மைகள் பொலிந்த தாக
நாட்டினை மாற்ற வேண்டும்!
புன்மைகள் நீக்கி வேறோர்
புதுயுகம் படைக்க வேண்டும்!
—புதுயுகம் படைத்துச்—சொர்க்க
பூமியாய் மாற்ற வேண்டும்!

எதிலுமோர் புதுமை காணும்
இயல்புடை மனிதர் நாங்கள்
புதியதோர் ஒளியை நோக்கிப்
புறப்பட நினைத்த தாலே
அதிவிரை வாக இங்கு
அன்பினுல் மாற்றம் கண்டு
புதுயுகம் படைக்க வேண்டும்.
புன்மைகள் தவிர்க்க வேண்டும்!
—புதுயுகம் படைத்துச்—சொர்க்க
பூமியாய் மாற்ற வேண்டும்!

(16-9-78 பௌர்ணமியன்று இலங்கை வானொலியில் நடைபெற்ற கவியரங்கில் இடம்பெற்றவற்றில் சில.)




## 'செவ்வந்தி''

தமிழகத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்குத்தான் இலங்கையில் நிரந்தரமான வாசகர்கள் உண்டு என்னும் நிலைமையை முறியடித்து இலங்கையில் தரமான ஒரு சிறந்த சஞ்சிகையாகவும், உயர்கல்வி மாணவர்களுக்கு உடனுதவும் நூலாகவும், தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'செவ்வந்தி' சஞ்சிகையின் 20-21வது வெளியீடு வெளிவந்துள்ளது. இதன் வெளியீடுபற்றிய விளக்கம் சஞ்சிகை ஆசிரியர் திரு. பா. தவபாலனுல் சஞ்சிகையின் இறுதிப் பக்கத்தில் பிரசுரிக்கடபட்டுள்ளது.

பாடத்திட்ட நூல்களின் அறிவிற்கு அப்பால்செல்லாது பரீட்சையில் சித்தி பெற்றுவிட விழைந்துநிற்கும் மாணவ உலகினுக்கு பாட அறிவுக் களஞ்சியமாகவும், அவர் தம் ஆக்கப்படைப்புகளுக்கு உறுதுணையாகவும், பொதுஅறிவு ஊட்டுவதாகவும்பொலிவுடன் வெளிவரும் செவ்வந்தியின் இவ்வெளியீட்டில், இளையோர் ஆக்கத்திறனை வளர்க்க 'புதுயுகம்' என்னும் தனிப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமணிக்கதிர் ஆசிரியரின் பேட்டி, யாழ். குடாநாட்டின் நீர்வளம் பற்றிய ஆய்வுக்கட்டுரை, பொது எண்ணம் என்னும் சட்டக்கட்டுரை, தனியார்துறை இயக்கமும் அரசாங்க நடவடிக்கைகளும் என்னும் பொருளாதாரக்கட்டுரையும் வழமையான விசேட அம்சங்களும், செவ்வந்தி நடாத்திய குறுநாவல், சிறுகதை, மாணவர் கட்டுரைப் போட்டி முடிவுகள் போன்ற அம்சங்களைத்தாங்கி வெளிவந்துள்ளது, இந்த இதழ்.

இவ்வெளியீட்டில் வரிக்குவரி ஏற்படும் எழுத்துட் பிழைகளைத் தவிர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டியது மிக அவசியம்.

-ஆனந்த்

### வரப்பெற்றேம்

இலங்கை அஞ்சல் தொலை தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தினரின் 'அஞ்சல் முரசு' வைகாசி-ஆவணி இதழ் வரப்பெற்றேம். காலாண்டுப் பத்திரிகையாகத் தமிழ் ஊழியர்களின் நலன்காக்கும்பொருட்டு இது வெளியிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதழில் இலங்கை அஞ்சல் தொலை தொடர்பு தமிழ் ஊழியர்களின் பிரச்னைகளும் அவர்களுக்குள்ள நெருக்கடிகளும் பற்றியவிபரங்கள் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

# பலதும் பத்தும்

ஜீவா

### கவிஞரைப்பற்றி 'சோ''

தமிழை கவிஞர் அடிமைப்படுத்தியிருக்கிறார்! அவருக்கு தமிழ் அடிமை! அதனுல் பலர் அவருக்கு அடிமையாயிருக்கிறார்கள். கவிஞருடைய தமிழ் சில சமயங்களில் புயலாக உருவெடுத்துவீசும்! சில சமயங்களில் தென்றலாகத் தோன்றும்! சில சமயங்களில் காட்டாறுபோல பெருக்கெடுத்து வரும்! சில சமயங்களில் தெளிந்த நீரோடை போல் தோற்றமளிக்கும்.

அவருடைய எழுத்துக்களைக் கண்டு பல சமயங்களில் நான் மலைத்து வியப்பதுண்டு. கவிஞருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு தெரியும் அவர் ஒரு குழந்தையுள்ளங்கொண்டவர் என்பது! கவிஞர் தமிழகத்திற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். சரஸ்வதிதேவியின் துணையும் பக்கபலமும் இவருக்கு இருக்கிறது.

கவிஞர் ஒரு குழந்தை இதுவரை இருந்ததுபோல் இல்லாமல் பெற்ற செல்வங்களைக் காப்பற்றிக்கொள்ளவும் கவிஞர் கற்றுக்கொள்ளவேண்டும்,

(கவியரசரின் பொன்விழாவில் துக்ளக் 'சோ' பேசியதிலிருந்து...)

### நம்பினுல் நம்புங்கள்

- ஒரு பவுண் தங்கத்தை மெல்லிய கம்பியாக நீட்டினுல் சுமார் 15 மைல் நீளப் நீட்டமுடியும்.
- மேற்கு ஆபிரிக்க நெருப்புக் கோழிகள் இடும் முட்டையொன்றின் நீளம் 8அங்குலம், நிறை நாலு பவுண்ட்
- எறும்புகளில் மொத்தம் 8000 வகை இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
- அமெரிக்காவில் ஆண்டொன்றுக்கு சராசரி பத்து லட்சம் கார்களை அமெரிக்க மக்கள் வாங்குகிறார்கள்.
- யானையின் துதிக்கையில் மட்டும் நாற்பதாயிரம் நரம்புகள் இருக்கின்றனவாம்.

### வல்லவனுக்குப் புல்லும்

கியூபாவில் நடந்த ஒரு சம்பவத்தைக் கேள்விப்பட்டு நீங்கள் வியப்படையலாம். டாக்டர் வில்லியம் சி. கார்காஸ் ஒரு சமயம் கியூபாவிலிருந்த போர் வீரன் ஒருவனுக்கு சத்திரசிகிச்சை செய்யவேண்டி இருந்தது. அதற்குவேண்டிய விளக்கு வசதி அங்கே இல்லை.

டாக்டர் ஒருகணம் யோசித்தார். மறுகணம் ஒரு கண்ணடி ஜாடி நிறைய மின்மினிப் பூச்சிகளைப் பிடித்துட்போட்டு அதிலிருந்து கிடைத்த வெளிச்சத்திலேயேசத்திரசிகிச்சையை வெற்றிகரமாக முடித்தார்.

### கலையும் கவியும்

''நீ கவிஞனுக விரும்புகிறுயா? கலைஞனுக விரும்புகிறுயா?''

''கலைஞனுகத்தான்.''

''ஏன்?''

''கலை என்பது கடல்போன்றது. குடித்தால் அது கலை, கொன்றுல் அது கலை,ஓடினுல் அது கலை. உட்கார்ந்தால் அது கலை, எதைச்செய்தாலும் கலைஞனென்று சொல்லிக் கொள்ளலாம். ஆனுல் கவிஞனுவது அப்படி இல்லையே!''

-கவியரசு கண்ணதாசன்

### ஆயிரத்தில் ஒரு வார்த்தை!

உப்பிட்ட உணவு போல் உன்பேச்சு எப்போதும் சுவைபலிந்திருக்கவேண்டும்.

- செயின்ட் போல்

## சிவாலய...

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

இது தென்மராட்சியின் தவவிசேடம்.

திருக்கேதீச்சரம் நெடுங்காலம் காடாய்க் கிடந்தது. நாவலர், மறைந்த கேதீச்சரத்தைக் காணவிழைந்து, தவமிருந்தார். யாழ்ப்பாணத்தைத் தூண்டினர். இப்பொழுது திருக்கேதீச்சர தரிசனம் ஓரளவு கிடைத்திருக்கின்றது. நாவலர் பெருமானின் தவம் இருந்தவாறு!

நம்மிடம் தவம் குடிகொள்ளுமாயின், நாடோறும், மேற்குறிப்பிட்டவாறு நம்மைத் திருத்தித்தித் திருத்தித் தவமிருப்போமாயின், சந்திரமௌலீசப் பெருமான் வெளிப்பட்டுக் ககட்சியளித்தருள்புரிவார். இவ்விஷயத்திற்கண்ணுங்கருத்துமாயிருப்போமாக.

சிவாலய வழிபாடு வாழ்க்கையின் சீவநாடி.

(18-9-78) திங்கள் மட்டுவிலில் நடைபெற்ற விழாவில் பண்டிதமணி நிகழ்த்திய (உரை.

## ஏட்டிலிருந்து

# தோழியின் கற்பனைக் காதல்!

ஒரு இளம்பெண்; மலை நாட்டு மங்கை. அதே நாட்டு இளைஞன்; இருவரும் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டனர். இளைஞன் மீதுதான் காதல் கொண்டிருப்பதோ, அவனுடன் பழகி வருவதோ யாருக்குமே தெரியாத பரமரகசியம் என்பது அவள் எண்ணம். இவளுக்கு ஒரு தோழி. இவள் தலைவி-அவள் தோழி. இருவரும் உடலும் உயிரும்போல. இணை பிரியாதவர்கள். இருந்தாலும் தனது காதல் நாடகத்தைத் தோழி அறியமாட்டாள் என்றுதலைவிநம்பினள் தினைப்புனத்தைக் காப்பதற்காக இருவரும் ஒன்றாகவே செல்வார்கள். அவன்-தலைவன் வரும் நேரத்தில் ஏதோ ஒரு சாக்குச்சொல்லி, தோழியைப் புனத்துக்கு வெளியே அனுப்பி விடுவாள் தலைவி. ஆனால், தோழியோ இலேசுப்பட்டவளல்ல. தலைவியின் திருவிளையாடல்கள் எல்லாம் அவளுக்குத் தெரிந்தே இருந்தது. தானாகத் தலைவி தன்னிடத்திலே இவற்றை எல்லாம் சொல்லுவாள். தனது உதவியைக்கோருவாள் என்றெல்லாம் தோழி எதிர்பார்த்தாள். ஒன்றுமே நடக்கவில்லை. அவள் நல்ல தோழி. தலைவியின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டவள். தலைவியின் நடத்தை எல்லாம் தனக்கும் தெரியும் என்று;அவளாகக் காட்டிக் கொள்ள வரும்பவில்லை. தன்னிடத்தில் நப்பிக்கை வைத்து, தனது காதலைத் தன்னிடம் கூறி, தனது ஒத்தாசையைத் தலைவி நாடுவாள் என்றுஎதிர்பார்த்து ஏமாற்றமடைந்த தோழிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை யோசித்தாள். சரி; அதுதான்வழி. தலைவி, தனது காதலைப்பற்றிக்கூறுதுவிட்டால் போகிறது. தானாவது தனது காதலைத் தலைவியிடம் கூறிவிடுவதென்று தீர்மானித்தாள். ஆனல் பாவம்? தோழிக்கு எவரிடமும் காதல் பிறக்கவில்லை. ஆகவே அவள், தலைவியின் காதல் களியாட்டத்தையே, தன்னுடைய காதல் நாடகமாகக் கற்பனைபண்ணி, தலைவியிடமே அதனைக்கூறி தலைவியின் உள்ளக்கிடக்கையை அறிய முற்படுகிறுள். தனது காதலைப் பற்றி தோழியிடம் கூற, தலைவி வெட்கப்படலாம்! ஆனல், தோழி-தனது காதலைப்பற்றித் தலைவியிடம் கூறுவதில் வெட்கம் எங்கிருந்து வரும்.

அவள் தலைவியைப் பார்த்துச் சொல்கிறுள். ''கருநீல மலர்போல, மைதீட்டிய கண்களை உடையவளே! நான் உன்னிடம் ஒரு விஷயம் சொல்லப் போகிறேன் கேள். ஒரு இளைஞன்; அழகாகத் தொடுக்கப்பட்ட வர்ணமலர்மாலையைத் தலையிலே சூடியவன்; கையிலே வில்லேந்தியவன்; தினைப்புனத்தின் பக்கமாக வருவான். மிருகங்களின் அடிச்சுவடுகளைத் தேடிவருபவன் போல, தலை குனிந்து, நிலத்தையே நோக்கியபடி நடந்துவருவான். என்னைக் காணும்போது, தனக்கு ஏதோ நோய் பிடித்திருப்பது போலவும், அதனைப்பற்றி என்னிடம் ஏதோ கூற ஆசைப்படுபவன் போலவும் தோன்றுவான். தனது வருத்தத்தையும் வாட்டத்தையும் வாய் திறந்து கூறுமல் முகக்குறிப்பால் மட்டும் காட்டிவிட்டுச் சென்றுவிடுவான். தன்னைப் பிடித்திருக்கும் நோயால்மட்டுமன்றி, அதனைப்பற்றி என்னிடம் கூற ஆசைப்பட்டும், கூற முடியவில்லையே என்பதனுலும் அவன் வருந்துகிறுன் என்பது எனக்குப் புரிந்தது. இப்படி அவன்-ஒருநாள் இரண்டுநாள் அல்ல- பலநாள், இந்தப்பக்கமாக வருத்தத்தோடு சென்றதை நான் கண்டேன்.

அவன் மட்டும் வருந்தினுல் பரவாயில்லை; அவனுடைய வருத்தத்தைக்கண்டு எனக்கும் பெரிய மனவருத்தம் ஏற்பட்டது. என்னைப பற்றித்தான் உனக்கு நன்ருகத் தெரியுமே! பிறர் வருந்துவதை என்னுல் சகிக்கவே முடியாது. அதுவும் ஒரு அழகான ஆடவன்; இளைஞன்; வர்ணமலர்மாலையைத்

### ''நச்சினார்க்குமினியன்''

தலையில் சூடி, கையிலே வில் ஏந்திவரும் ஒரு வீரன், மனவருத்தப்பட்டால், என்னுல் சகிக்கமுடியுமா? நானும் அவனைப் பார்த்து வருத்தப்பட ஆரம்பித்தேன். அவனுக்கும் எனக்கும் ஒருவிதமான உறவும் இல்லை. முன்பின் எனக்கு அறிமுகமில்லாதவன் அவன். இருந்தாலும், அவனுடைய வருத்தம் என்னையும் தொற்றிக் கொண்டது. அவன் மீது கொண்ட வருத்தத்தினல்,அவனுக்காக நான் வருந்தினேன். இரவிலே நித்திரையும் வருவது கிடையாது. பாயில் படுப்பதையே விட்டுவிட்டேன்.

### என்னைக் கண்டதும்

இப்படியேபோனுல் எப்படி? அவனே ஆண்பிள்ளை; வீரன்-ஆனுல் என்னைக் கண்டதும் கோழையாகி விடுகிருன். காட்டுவிலங்குகளுக்குஅஞ்சாத அந்தக்காளை, என்னைக்கண்டு நாணம் கொள்வதை என்னுல் சகிக்க முடியவில்லை. நேருக்கு நேராக என்முன் நின்றுதனது வருத்தத்தைப் பற்றிக் கூறும் ஆற்றல் அவனிடம் இல்லை. நானே ஒரு பெண்; நாற்குணமும்நாற்படையாகக்கொண்ட நங்கை. நான் போய், ''உன் மீது நான் காதல் கொண்டு விட்டேன்'' என்று அவனிடம் சொல்லமுடியுமா? அப்படிச் சொன்னுல், எனது பெண்மை என்னுகும்? இருதலைக்கொள்ளி எறும்புபோல எனது மனம் தத்தளித்தது. எனக்காகவும் தவித்தேன; அவனுக்காகவும் தவித்தேன் - இருவருக்காகவும் என்மனம் தவியாய்த் தவித்தது.

### துணிந்துவிட்டேன்

ஆனுல், இதே நிலைமையைத் தொடர்ந்து நீடிக்கஅனுமதிக்க முடியுமா? நான் அவன் மீது காதல் கொண்டு விட்டேன் என்பதை அவன் காணுமல் இறந்துபோய்விட்டால்? இப்படி ஒரு பயம் என்னைப் பிடித்துக்கொண்டது. என் தோள்கள் வாடின. வளையல்களோ கைகளிலிருந்து நழுவ ஆரம்பித்தன ஊணும் இல்லை, உறக்கமும் இல்லை. உடம்பு நெகிழ்ந்துவிட்டது. காதல் நோய் என்னை நன்ருக ஆட்கொண்டுவிட்டது. எனவே, துணிந்து ஒரு நாணங்கெட்ட செயலைச் செய்துவிட்டேன்.

நாம் கிளிக்கூட்டத்தைக் கலைத்துத் தினைப்புனத்தைக் காக்கும் இடத்திற்குப் பக்கத்தில் ஒரு சோலை இருக்கிறதல்லவா! அந்தச் சோலையில் ஒரு நாள்நான்ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக்கொண்டிருந்தேன். எனது மனமும் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. என்றும் போல அவன் அன்றும் அந்தப் பக்கமாகதலைகுனிந்துதரையை நோக்கித் தடம் தேடிக் கொண்டு வருபவன் போல வந்தான். எனக்கு அன்று இந்தத் துணிச்சல் எப்படித்தான் வந்ததோ தெரியவில்லை. எனது நாணம் அன்று எங்கேஎன்னைப் பார்த்து நாணிஒளிந்துகொண்டதோ தெரியவில்லை. நான் அவனைப் பார்த்து, ''ஐயா, இந்த ஊஞ்சலைச் சிறிது ஆட்டி விடு'' என்றுகேட்டுவிட்டேன்.

நான் கேட்டது கேட்டு வாய் மூடுவதற்குள், அவன் எனது துணிச்சலைப் பற்றி, எனது நாணமிழந்த செயலைப்பற்றி என்ன நினைப்பானே என்று நான் வியப்படைவதற்கு முன் அவன், ''பெண்ணே, நல்லது'' என்று கூறி ஊஞ்சலை ஆட்ட ஆரம்பித்தான். அவன் ஊஞ்சலை ஆட்ட, நான் மகிழ்ச்சியோடு ஆடிக் கொண்டிருந்தேன் எனது மனமோ பிரபஞ்சமுழுவதும் ஆடிக்கொண்டிருந்தது காலம் முழுவதும் இப்படியே, அவன் ஆட்ட, நான் ஆடிக்கொண்டேயிருக்கலாம் போல, இனிமையாக இருந்தது அந்த அனுபவம். ஆனுல் அது போதுமானதாக எனக்குத் தோன்றவில்லை. ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்த எனக்கு, திடீரென்று ஒரு பேராசை. அவன் மார்பிலே ஊஞ்சலாட வேண்டும் போல் ஒருஎண்ணம். முதலில் நாணத்தை இழந்த எனக்கு, இனிமேல் எதுவுமே இலகுவாகத் தோன்றியது. ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்த நான், திடீரென்று கைநெகிழ்ந்து, விழுந்துவிட்டவள் போல நடித்து, அவன் மார்பின்மீது, மயக்கமுற்றவள் போல வீழ்ந்துவிட்டேன்.

### தன் மார்போடு

நான் மெய்மெய்யாகவே கைநழுவி விழுந்துவிட்டேன் என்று நம்பிய அவன், வாரி எடுத்து என்னைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். எனக்கோ மயக்கம். மயக்கம்தெளிந்து எழுந்துவிட்டேனயின், அவன் அரைவினாடி தானும் என்னை அணைக்க முற்பட்டிருக்கமாட்டான் என்பது எனக்குத்தெரியும். அப்படி மயக்கம் தெளிந்து எழுந்து விட்டேனேயானுல், அதே கணம் ''பெண்ணே, செல்க'' எனக் கூறி, என்னை அனுப்பி விடும் பண்பு மிகுந்தவன் அவன். அவனைப் பற்றிதான் எனக்குப் பல நாட்களாகத் தெரியுமே. என்னை நேருக்கு நேர் நிமிர்ந்து பார்ப்பது பண்பில்லை என்று நம்பியவன் தனது உள்ளத்து நோயை என்னிடம் எடுத்துக் கூருமல், மிகுந்த மனவருத்தத்தோடு எத்தனைநாள் போயிருக்கிருன். இத்தனை பண்புள்ள அவன், பயக்கம் தெளிந்து நான் விழித்தால், உடனே என்னை 'போய் வருக' என்று கூறி அனுட்பி விடுவான். ஆகையினுல், மயக்கம் தெளியாது. மெய்யாகவே அவனுடைய மார்பில் விழுந்து கிடப்பவள்போல, நெடுநேரம் விழுந்துகிடந்தேன்.

என்னுடைய செயலைப்பற்றி நீ என்ன நினைக்கிருய்? என்று தனது கதையை முடித்தாள் தோழி.

குறிஞ்சிக்கலியில் வருகிறது இந்தக்கதை. இதோ-பாடல்.

''கயமலர் உண்கண்ணுய்!
காணுய் ஒருவன்
வயமான் அடித்தேர்வான்
போலத் தொடைமாண்ட
கண்ணியன், வில்லன் வருப
என்னை நோக்குபு,
முன்னத்திற் காட்டுதல்
அல்லது தானுற்ற
நோய்உரைக் கல்லான்
பெயருமன் பன்னுள்.
பாயல் பெறேன்
படர்கூர்ந்து, அவன்வயின்
சேயேன்மன் யானும்
துயர்உழப்பேன் ஆயிடைக்
கண்நின்று கூறுதல்
ஆற்ருன் அவனயின்
பெண்ணன்று உரைத்தல்
நமக்காயின் இன்தூஉம்
காணுன், கழிதலும்
உண்டென்று, ஒருநாளென்
தோள் நெகிழ்புற்ற
துயரால் துணிதந்தோர்
நாணின்மை செய்தேன்,
நறுநுதால்! ஏனல்
இனக்கிளி யாம்கடிந்து
ஓம்பும் புனத்தயல்
ஊசல் ஊர்ந்தாட,
ஒருஞான்று வந்தானை,
'ஐய! சிறிதென்னை
ஊக்கி' எனக்கூறத்,
'தையல்! நன்று' என்று
அவன் ஊக்க,கைநெகிழ்பு,
பொய்யாக வீழ்ந்தேன்
அவன்மார்பில்!
வாயாச்செத்து,
ஒய்யென ஆங்கே எடுத்தனன்
கொண்டான்மேல்,
மெய்யறி யாதேன்போல்
கிடந்தேன்மன், ஆயிடை
மெய்யறிந்து ஏற்றெழுவே
னயின், ஒய்யென
'ஒண்குழாய்! செல்க'எனக்
கூறிவிடும் பண்பின்
அங்கண் உடையன் அவன்.

ஞானத்தமிழ் - 43

# 'அருள் வெள்ளமும் கள்ளத்திறைவரும்'

யானை முதலிய மிகப் பெரிய பிராணிகளும், கொசுகு போன்ற மிகச் சிறிய பிராணிகளும், தம்முடைய உயிரைக் காத்தற்கு வேண்டிய வழியை வகுத்தருளியது யார்? சூரியன்-சந்திரன், நட்சத்திரங்கள், இவை யாவும் தத்தம் நிலை குலையாமல் ஒரே சீராக நிற்கும்படி செய்தவர் யார்? பலவித மலர்களையும் அவற்றிலே அழகையும், வாசனையையும் வைத்தவர் யார்? இப்படியே இயற்கை அழகு ஒவ்வொன்றையும் உற்றுநோக்கிக் கேட்டால் கிடைக்கும் விடை ஒன்றுதான். அந்த விடை இறைவன் அருள் என்பதே.

''அமைதியாக விளங்கும் மலைகளிலும், அதன்மேற் ருேன்றும் நட்சத்திரங்கள் நிறைந்த வானவெளியிலும்'' வோட்ஸ்த் வோர்த் போன்ற ஆங்கிலப் புலவர்கள் மன நிறைவைக் கண்டதாகப் பாடியுள்ளார்கள். அவை இறைவனின் அருள்வெள்ளம்தான் என்பதை அவர்களும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இந்த அருள்வெள்ளத்தை நாம் கண்டாலும், அல்லது அதன் பெருமையை பிறர் சுட்டிக்காட்டினுலும் நாம் உணர்வதில்லை. இது எங்கு நல்ல நீர்வெள்ளம் நிறைந்திருக்கும் போது நீர் விடாயினுல் நாவரண்டாலும் ஒருவன், அதனைக் குடியாமல் செல்வதைப் போன்றது. அதுமாத்திரமல்ல பகலிலே தம் கண்களைப் பிரயோசனப்படுத்தாதவனையும் போன்றது. இதனை,

''வெள்ளத்துள் நாவற்றி
யெங்கும்
விடிந்திருளாம் கள்ளத்
திறைவர் கடன்''

எனத் திருவருட்பயன் கூறும். 'கள்ளத்திறைவர்' என்பதற்கு 'திருவருளையும் அதன்பெருமையையும் உணரமாட்டாத கள்ளத்திலே அதிகரித்த உயிர்கள்' என்பது உரைக்குறிப்பு.

வெள்ளத்துள் நாவற்றுதல் உலக நடைக்கு ஒவ்வாத உவமையாகும். இவ்வித உவ

### வ. குகசர்மா

மையை கலித்தொகையில் யாம் காண்கின்ருேம். ஒரு காதலன் தான் காதலித்த பெண்ணைக் கைவிட்டு எங்கேயோ சென்றுவிட்டான் அந்தப் பெண்ணும் அவள் தோழியும் ஒருநாள் தினையை உரலிலிட்டுக் குற்றுகிருர்கள். காதலியோ காதலனைப் பழிக்கின்ருள். தோழியோ காதலன் வருவான் எனக் கூறுகிருள், இவ்வாறு மாறிமாறி வள்ளைப் பாட்டுப் பாடுகிருர்கள். அப்போ தோழி கூறுகிருள் ''அன்புள்ள அத்தலைவன் வராமற் கொடுமைசெய்தால் தண்ணீரிலே மலர்ந்த குவளை மலர் அத்தண்ணீரிலே வெந்து போவது போன்றது'''

''வாராது அமைவானே
வாராதுஅமைவானே
வாராது அமைகுவான் அல்
லன்-மலைநாடன் ஈரத்துள்
இன்னவை தோன்றின்
நிழல்கயத்துள்
நீருள் குவளைவெந்தற்று.''

நீருள் குவளை வெந்து சாம்பராகுமா என்பது இங்கு நோக்கத்தக்கது.

அடியார் உள்ளத்தில் இறைவன் நிற்பானுயினும் அவர்கள்கூட சில சமயங்களில் முழுவதும் உணரமுடியாமல் வருந்துவதைப் பார்க்கிருேம்.

''உள்ளத்தே நிற்றியேனும்
உயிர்புளே வருதியேனும்
கள்ளத்தே நிற்றி அம்மா
எங்ஙனம் காணுமாறே''

என்பது நாவுக்கரசர் வாக்கு. இதுபோலவே மணிவாசகரும் நீத்தல் விண்ணப்பித்தல் ''உத்தரகோச மங்கைக்கரசே நீர்ப்பெருக்கின்நடுவேயிருந்தும் நீர் பருகாது தாகத்தினுல் நாவானது உலர்ந்துபோனுற்போல, நின்அருள்வெள்ளத்தைப்பெற்றும் துயரத்தில் நின்றும் நீங்க முடியாத என்னைக் கைவிட்டு விடாதே'' என்று கேட்கின்ருர்.

''வெள்ளத்துள் நாவற்றி
யாங்குன் அருள்பெற்று
துன்பத்தின் நின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண்
டாய் விரும்பும் அடியார்
உள்ளத்துள் ளாய்மன்னும்
உத்தரகோசமங்
கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு
ள்ளாய்களி யாதகளி
யெனக்கே''

## இந்து இளைஞர்

நல்லூர் இந்து இளைஞர் மன்றத்தினா ''யாழ் இந்து'' என்னும் மாத சஞ்சிகையை வெளியிட்டுள்ளார்கள். இம்மாதச் சஞ்சிகை எட்டுப் பக்கங்களைக் கொண்டதாகச் சிறந்தமுறையில் அமைந்துள்ளது. வினைகள் தீர்க்கும் 'விநாயகர் பெருமை' என்னும் கட்டுரையுடன் 'இந்து இளைஞர்மன்ற அறிக்கை,' 'இந்து சமயம் ஒரு சிந்தனை' என்பவையோடு 'வெளிவராத செய்திகள்' என்னும் பகுதியில் இலங்கையில் இந்துக் கோயில்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலைகளையும், 1977 வன்செயலால் அகதிகளாக்கப்பட்ட இந்துக்களுக்கு உதவிகள் எனும் போர்வையில் மதமாற்றம் செய்யப்படுவதையும் இந்து இளைஞர்களின் கடமைகளையும் எடுத்துக்கூறியிருக்கிருர்கள் இதன் ஆசிரியராக திரு அ செந்தில்குமார் விளங்குகின்ருர்.

-அருள்

# தமிழக நினைவுகள்-3

### அந்தனி ஜீவா

என்னை வியப்பில் ஆழ்த்திய அந்தப்பெயர் வேறு யாருமல்ல, தமிழகத்தின் தலை சிறந்த படைப்பாளியும் புதுமைப்பித்தனுக்குப் பிறகு என்னைக் கவர்ந்த படைப்பாளி... ஜெயகாந்தன்!

ஜெயகாந்தனின் எழுத்தில் எனக்குஎப்பொழுதும் பிரேமை உண்டு அவரின் சொற்களின் சுழற்சியும் மொழியும் லாவகமும் படிப்போரை மீண்டும் படிக்கத் தூண்டும்.

திருப்பூரில் ஜெயகாந்தனை சந்தித்து அவருடன் நீண்ட நேரம் உரையாடவேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டேன்.

நண்பர் கனகராஜிடம் 'தினத்தந்தி' காரியாலயம் எங்கே என்று கேட்டேன்,

இங்கிருந்து அரைமைல் தூரம்தான் இருக்கும் நடந்தே போய்விடலாம் என்றார்.

'தினத்தந்தி' திருச்சி பதிப்பின் ஆசிரியரான திருச்சி பாரதன் எனது நீண்டநாளைய நண்பர். அவருக்கும் எனக்கும் கடந்த ஐந்து ஆண்டுகளாக கடிதத்தொடர்பு உண்டு.

திருச்சி பாரதன் எழுத்தாளர், நாடகாசிரியர். இவர் எழுதிய 'அப்பாவின் ஆசை' நாடகத்தை நாடகமேதை டி. கே. சண்முகம் நாடெங்கும் நடத்தியுள்ளார். இதுவே இந்தியாவில் அரங்கேற்றப் பட்ட முதல் குழந்தை நாடகம்.

திரைப்பாடல்களுப் ; ஏராளமான பக்திப்பாடல்களும் எழுதியுள்ளார். டைரக்டர் ஏ. பி. நாகராஜன் டைரக்ட் செய்த 'மேல்நாட்டு மருமகள்' திரைப்படத்தில் 'கலைமகள் கைவீணைமுழங்குதம்மா' என்ற வாணி ஜெயராம் பாடியுள்ள பாடல் இவர் எழுதியதே. சீர்காழி கோவிந்தராஜன் பாடும் பக்திப்பாடல்களில் அதிகமானவை இவர் எழுதியதே!

குறிஞ்சி ஓட்டலில் உள்ள தொலைபேசிமூலம் 'தினத்தந்தி' அலுவலகத்திற்கு தொடர்புகொண்டேன்.

உடனடியாக திருச்சி பாரதனுடன் தொடர்பு கிடைத்தது.

நான் திருச்சி வந்திருப்பதை அறிந்து அவர் உடனே என்னைப்பார்க்க வருவதாக தெரிவித்தார். நான் அவரைத் தொல்லைப்படுத்த விரும்பாமல் இன்னும் சில நிமிடங்களுல் நானே நேரில் வருவதாகக் குறிப்பிட்டேன்.

திருச்சியைப் பார்க்கும் பொழுது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தால் எத்தகைய உணர்வு ஏற்படுமோ அத்தகைய உணர்வு தான் எனக்கு ஏற்பட்டது.

திருச்சி எனக்கு யாழ். நகராகவே காட்சியளித்தது. எங்கு பார்த்தாலும் தமிழிலே விளம்பரப்பலகைகள், சினிமா போஸ்டர்கள் இவைமாத்திரமா முந்திரிகையும், ஆப்பிளும் என்னைப் பார்த்துக் கண் சிமிட்டின.

இருங்கள் இன்றைக்கு இரவு நகரை ஒரு கை பார்த்து விடுவது என்று முந்திரிகையையும், ஆப்பிளையும் பார்த்து சபதமெடுத்தேன். நானும் நண்பர் கனகராஜும் 'தினத்தந்தி' காரியாலயத்தை அடைந்தோம்.

''தினத்தந்தி'' திருச்சி பதிப்பின் ஆசிரியரான திருச்சி பாரதன் புன்னகையுடன் வரவேற்றார். சக ஆசிரியர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தினார். பின்னர், அக்கறையுடன் இலங்கையைப்பற்றி கேட்கிறார் அவரது நெருக்கமான நண்பர் 'செய்தி' நாகலிங்கத்தைப் பற்றி விசாரிக்கிறார். நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் நலமாகவிருக்கிறாரா? என வினவுகிறார்.

கலையரசு சொர்ணலிங்கம், டி. கே. சண்முகம், டி. கே. பகவதியின் குடும்ப நண்பரல்லவா? டி கே எஸ். குடும்பத்தினருடன் நெருங்கிய தொடர்புகொண்டவரல்லவா திருச்சி பாரதன்.

ஆபீஸ் பையன் காப்பி கொண்டுவந்து வைக்கிறான். எல்லோரும் காப்பியை இன்முகத்துடன் அருந்துகிறோம்.

திருச்சி பாரதன் பேசிக் கொண்டேதயாராகப்போகும் பத்திரிகையின் முழுப்பச்சபுறாப் ஒன்றைப் பார்வையிடுகிறார். பின்னர் சக ஆசிரியருக்கு ஏதோ கட்டளையிடுகிறார். பின்னர் வாருங்கள் அலுவலகத்தைப் பார்க்கலாம் என அழைக்கிறார்.

'தினத்தந்தி' அச்சிடும் ராட்சஸ ரோட்டரி மெஷின் களைப் பார்வையிடுகிறோம். இங்கு பத்திரிகைக் காரியாலயங்களில் இருப்பது போல மொனோடைப் மெஷின்.

'தினத்தந்தி' ஒரே நேரத்தில் எட்டு மாவட்டங்களில் வெளியாகிறது. அந்தந்த மாவட்டங்களின் செய்திகளுக்கு சிறிது முக்கியத்துவம் கொடுத்தாலும், ஏனைய செய்திகள் ஒரே விதமாகத்தான் இருக்கும் என்கிறார் திருச்சி பாரதன்.

''ஒரே நேரத்தில் ஒரேவிதமான செய்திகள் எப்படி எல்லா மாவட்டப்பதிப்புகளிலும் வெளியாகும்'' என ஆர்வத்துடன் கேட்கிறேன்.

''நாங்கள் 'டெலக்ஸ்'மூலம் எங்களுக்குக் கிடைக்கும் செய்திகளை தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கிறோம்'' என்கிறார்.

''ஒவ்வொரு மாவட்டங்களிலும் 'தினத்தந்தி'பதிப்புகளில் மொழி பெயர்க்கும் பொழுது அந்த செய்தி வித்தியாசப் படாதா?'' என்கிறேன்.

''நாங்கள் டெலக்ஸ்மூலம் தமிழ்வார்த்தைகள், செய்திகள் தமிழில் எப்படி எழுதுகிறோமோ அதனை அப்படியே ஆங்கில வார்த்தைகளில் அனுப்பி வைக்கிறோம். அதனை அப்படியே எழுதினால் வித்தியாசப்படாது'' எனக் கூறி 'டெலக்கஸ்' செய்தி ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.

ஆதித்தன் என்ற தனி மனிதரால் ஆரம்பிக்கப்பட்டு இன்று பெரும் விருட்சமாக வளர்ந்திருக்கும் தினத்தந்தி ஸ்தாபனத்தை எண்ணிப்பார்க்கும் பொழுது பத்திரிகை உலகில் ஆதித்தன் ஒரு முடிசூடா மன்னராகவே காட்சியளிக்கிறார்

திருப்பூர் மாநாட்டில் கலந்துகொண்டு மீண்டும் திரும்புவதாகக் கூறி திருச்சி பாரதனிடம் விடை பெறுகிறேன். கொஞ்சம் இருங்கள் என்று அன்புக் கட்டளை போடுகிறார். நானும் மீண்டும் ஆசனத்தில் அமர்கிறேன்.

தினத்தந்தி துணை ஆசிரியர் ஒருவர், என்னிடம் இலங்கையைப்பற்றி சில கேள்விகளைக் கேட்கிறார். அவர் என்னைப் பேட்டிகாண்கிறார் என்று விளங்கியது.

இலங்கையின் கலை, இலக்கியத் துறைகளைப் பற்றியும், பத்திரிகைத் துறைபற்றியும் கேட்கிறார் நான் என்ன பதில் சொல்லப்போகிறேன் என ஆர்வத்துடன் பார்க்கிறார்,

(தொடரும்)

## சீட்டிக் கச்சேரி!

சீட்டி அடிப்பது பண்பாடற்ற செயல் எனக் கொள்ளுவார்கள். தமிழகத்தைச்சேர்ந்த திரு. எஸ். வி. ரமணி என்பவர் அரைமணிநேரம் சினிமா பாட்டுக்களை விட கர்னாடக சங்கீதத்தைச் சேர்ந்த ராக ஆலாபனை, சில கிருதிகளுடன் மிகத்திறமையாக சீட்டியடிக்கின்றாராம்.

கிளப் டான்சுகள், பொப்பிசை என்பனவின் வரிசையில் சீட்டிக் கச்சேரியும் ஒரு கலையாக இவரால்வளர்ந்து கொண்டிருக்கின்றதாம். —அருள்

## ஒருதுளி மழைகூட இல்லை!

அதி வரட்சியுள்ள பிரதேசம் சிலி நாட்டிலேயே இருக்கிறது. அட்டகாமா என்ற இப்பாலைவன நகரில் பெய்யும் மழையை அளவிடக்கூட முடியாது. இப்பாலைவனத்தின்கலமா என்ற நகரில் இதுகால வரைஒருதுளி மழைகூடப் பெய்ததில்லை.

---

# உங்கள் கேள்விகளும் ஆவிகளின் பதிலும்

கேட்டு எழுதுபவர்:
### வி. ரவிச்சந்திரன்

எஸ். கே. சிவம்...
கரவெட்டி.

என்னுடைய எத்தனையாவது வயதிலிருந்து எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்?

35 வயது முதல்.

சுவிப் போன்ற அதிர்ஷ்டம் உண்டா?

உண்டுண்டு.

எனது தாயார்... 1969ம் ஆண்டு... தற்கொலை செய்து கொண்டார். அவர் எங்குள்ளார்?

அவர் நல்ல நிலையிலில்லை என்று கூறுவதற்கு வருந்துகிறோம்.

எனது படிப்பைத் தொடரலாமா? படிப்பதால் எனக்கு பலன் உண்டா? வெளிநாடு செல்வேனா?

படிப்பைத் தொடருங்கள். உமது எதிர்காலமே படிப்பில் தான் உள்ளது. வெளிநாட்டு ஆசையை மறந்து விடுங்சள்.

ச. அப்பையா...
அராலி.

எனது மகள் யோகராணி பல உத்தியோகங்களுக்கு விண்ணப்பித்தும் கிடைக்கவில்லை. எப்போது உத்தியோகம் கிடைக்கும்?

அடுத்த ஆண்டுக்குள்கிடைக்கும்.

இவரது எதிர்காலம் எப்படி இருக்கும்?

இரண்டுவருடம் கழித்து சுகமாக வாழ்வார்.

மற்றெருமகள் திலகராணி எதிர்வரும் பரீட்சையில் சித்தியடைவாரா?

அடைவார்.

திரு...
(பெயர் குறிப்பிட விரும்பாத வாசகர்) கரவெட்டி.

1972 ஆனி மாதம் 6ம்திகதி முதல் பாரிச நோய்வாய்ப் பட்டு படுத்த படுக்கையாக இருக்கிறேன். நோய் நீங்க என்னவழிவகைகளைக்கையாள வேண்டும்? எனது கஷ்டமான வாழ்வு நீங்கி என்னுடைய வாழ்வில் முன்னேற என்ன செய்யவேண்டும்? எனதுமுடிவு எங்கே எப்படிப்பட்டதாக இருக்கும்?

வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள், நம்முடைய ஊழ்வினையை நாம் அனுபவித்துத்தான்தீரவேண்டும். இறைவனை பிரார்த்தனை செய்து நமக்கு அவன் காட்டிய வழி இதுதான் என்று மனஅமைதியுடன் காலம்தள்ள முயலுங்கள். உமக்கு அதுதான்நல்லது. வேறு எதையும் நாம் சொல்லத் தயாராக இல்லை.

விஜயமனோரஞ்சன்
லூக்மான்சி சதுக்கம்.
கொழும்பு-14.

நான் இந்தவருடம் க. பொ. த. (உயர்) பரீட்சை சித்தியடைவேனா:

சித்தி உண்டு.

கேள்வி...?

கடன்தீர 5வருடம் ஆகும்.

கேள்வி...?

பெற்றோர் முடிவுடன் சொந்தத்தில் நடக்கும்.

எதிர்காலம் எப்படி அமையும்?

நன்ருக இருக்கும்!

எத்தொழிலில் முன்னேறலாம்?

எந்தத்தொழிலிலும் உமக்கு முன்னேற்றம் உண்டு.

க. தேவராசா
யாழ்ப்பாணம்.

எங்கள் குடும்பத்தில் 10பேர் உள்ளோம். வேறு ஒருவர் காணியில் குடியிருக்கிறோம். அவர்களும் அதை விற்றுவிட்டனர். விற்கும்போது எங்களுக்குத் தரும்படி கேட்டோம். கொடுக்கவில்லை இப்போது அதற்கு வழக்கு வைத்து வழக்கில் தோற்றுவிட்டோம். அவர்களுக்கே சாதம்... மீண்டும் அப்பீல் செய்தால் எமக்குத் தீருமா?

உங்கள் முயற்சி தோல்வியடையும்.

எமது மூத்த சகோதரிக்கு எப்போது திருமணம்?

அடுத்த ஆண்டுதான்.

எனது சகோதரன் வெளிநாடு செல்வாரா?

செல்வார்.

எங்கள் குடும்பகஷ்டம் எப்போது நீங்கும்?

இரண்டு வருடம் கழித்து நீங்கும்

எனது தொழிலில் பதவி உயர்வு உண்டா? வெளிநாடு செல்வேனா?

பதவி உயர்வு உண்டு. வெளிநாடு போகமுடியாது.

பொ. விசுவரெத்தினம்
யாழ்ப்பாணம்.

நான் அரசாங்க அலுவலகம் ஒன்றில் சாரதியாகக் கடமையாற்றுகிறேன் எனதுபொறுப்பில் தான் குடும்பம் உள்ளது. என்னைப்போலவே அரசாங்க வேலையிலிருக்கும் சகோதரனால் வீட்டுக்கு அனுகூலமில்லை. இதற்கு என்ன செய்யலாம்?

சகோதரனை எதிர்பார்க்க வேண்டாம். நீங்கள் இன்னும் சிக்கனத்தை கையாளவேண்டும். அதற்கு நீங்கள் இருக்கும் இடத்தை விட்டு வேறு இடத்திற்கு மாற்றம் செய்துகொள்ளுங்கள்.

எனது சகோதரிக்கு எப்போது திருமணம்?

இவ்வாண்டே.

எனக்கு எப்போது திருமணம்?

இரண்டு வருடத்தில்.

எனது நெருங்கிய உறவினர் என்னிடம் 7000 ரூபா கடன் வாங்கிவிட்டு 5 ஆண்டுகளாக தரவில்லை. அது எனக்குக் கிடைக்குமா?

ஏமாற்ற நினைக்கவில்லை அவர்! கொடுப்பதற்கு அவரது பொருளாதாரம் இடம்தரவில்லை. விட்டுத்தான் பிடிக்க வேண்டும்.

கே: நான் வெளிநாடு செல்வேனா?

ப: இல்லை.

கே: நானும் எனது நண்பரும் சேர்ந்து ஒரு தொழில் செய்ய உத்தேசித்துள்ளோம். இதில் முன்னேற்றம் உண்டா? இருவரும் சேர்ந்து செய்யலாமா? ஒருவர்மட்டும் செய்யலாமா?

ப: செய்யலாம். முன்னேற்றம் உண்டு. சேர்ந்தே இருங்கள். பிரியாதீர்கள்.

செல்வி...

(பெயர் குறிப்பிட விரும்பாத வாசகி) உப்புக்குளம், மன்னார்.

கே; நான் ஒருவரை விரும்புகிறேன். இது திருமணத்தில் முடியுமா?

ப: உங்களுக்கு எது வாழ்த்துக்கள்.

கே: எனது மூத்த சகோதரி ...கர்ப்பிணியாக இருக்கிறாள் அவளுக்கு என்ன குழந்தை பிறக்குப?

ப: ஆண் மகவு.

திரு: பி: ஏ.
இல. 3, புத்தூர் கிழக்கு.

பதில்கள்; தற்போதைய நிலையில் பரீட்சையில் சித்தியில்லை. இன்னும் நன்ருகப் படியுங்கள். உமக்கு தொழிலே சிறந்தது. உயர்கல்வி கிடைப்பது கடினம். அடுத்த ஆண்டில் எழுத்துச் சம்பந்தப்பட்ட தொழில் கிடைக்கும். 3 வருடம் கழித்து இனியவள் ஒருவளை மணப்பீர்கள். உங்கள் அண்ணனும் உங்கள் தாயின் தாயும் உயர்ந்த புண்ணிய லோகத்திலே உள்ளனர். இவர்களால் நன்மையுண்டு. நீங்கள் வெளிநாடு போகமாட்டீர்கள். இன்னும் 3 வருடத்திற்கு நேரம் சரியில்லை. அதன்பிறகு தான் எடுத்த காரியம் கை கூடும். தந்தையின் பெயரை நீர் விரும்பியபடி மாற்றலாம். நன்று.

செல்வி ஜெயா,
நல்லூர், யாழ்ப்பாணம்.

கே: நான் க. பொ. த. உயர் வகுப்பில் பரீட்சை எடுத்தேன். முடிவுகள் நன்ருக வருமா?

ப: வெற்றி உண்டு.

கே: பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைக்குமா? அல்லது தொடர்ந்து க, பொ. த. உயர்தரம் படிப்பேனா?

ப: பல்கலைக்கழக அனுமதி கிடைக்காது. தொடர்ந்து க. பொ த. உயர்தரம் படிப்பீர்கள்.

கே. எனக்கு எத்தனை வயதில் உத்தியோக வாய்ப்புக் கிடைக்கும்?

ப: 23 வயதில் உத்தியோகம் கிடைக்கும். எழுத்து வேலை.

கே: எனக்கு எப்போது திருமணம்?

ப; 24-வது வயதில்.

கே: எனது அக்காவின் பரீட்சை முடிவுகள் எப்படி இருக்கும்? உயர் படிப்பு உண்டா?

ப: தேறிவிடுவார். உயர் படிப்பு உண்டு.

கே: அவளுக்கு எந்த வயதில் உத்தியோகம் கிடைக்கும்?

ப; வேலைகிடைப்பது கடினம். திருமண வாழ்க்கை அமையும்.

கே: அவளுக்கு எப்போது திருமணம்?

ப: அடுத்த ஆண்டிலேயே வாய்ப்புள்ளது.

கே: வெளிநாடுசெல்வாளா?

ப: இல்லை.

கே; எங்கள் தம்பி வருங் காலத்தில் எப்படி இருப்பாள்?

ப: நன்ருக படித்து உயர் பதவி வகிப்பான்.

அண்ணு தங்களின் ஆவியுலகத்தொடர்பு என்ற அம்சத்தை என் வீட்டார் ஆவலுடன் படிப்பர், தாங்கள் இலங்கைக்கு நிச்சயம் வரவேண்டும். தாங்கள் பலரின் ஆதரவைப்பெற்று என்றும் சுக பெலத்துடன் வாழ இந்த தங்கை வாழ்த்துகின்ருள்.

நன்றி... நன்றி... நன்றி.



'பைலட் பிரேம்நாத்' படத்தில் நவரச நடிகர் விஜயேந்திரன் விமானத்திற்கு வெடிகுண்டு வைக்கும் மனோவியாதிக்குள்ளான பயங்கரவாதி பாத்திரத்தில் நடிக்கிறார்.

எவ்வித மேக்கப்புமில்லாது தாம் ஏற்கும் பாத்திரத்தை உணர்ந்து நடித்த திரு. விஜயேந்திரனை 'நீங்கள் மிக நன்றாக நடிக்கின்றீர்கள்' என நடிகர் திலகம் சிவாஜி பாராட்டினார். மற்றும் 'பைலட் பிரேம்நாத்' இயக்குநர் திருலோகச்சந்தரும் 'பாராட்டத்தக்க நடிப்பு' என்று விஜயேந்திரன் நடிப்புப் பற்றிக் கருத்து வெளியிட்டார்.

# சாட்டி சிந்தாத்திரை மாதா

தமிழ்நாட்டில் வேளாங்கண்ணி எப்படியோ அவ்வாறே ஈழத்தில் சாட்டி என்ற கிராமத்தில் அலைகடலின் திரைமோதும் கடற்கரையில் சிந்தாத்திரை மாதா ஆலயம் விளங்குகின்றது.

லைடன் தீவில் பழம்பெரும் கிராமமான வேலணையின் வடகீழ் திசையில் அமைந்துள்ள குக்கிராமம் சாட்டி. வெள்ளைக் கடற்கரை என்று அழைக்கப்படும் கடலோரத்தில் அமைந்துள்ள இவ்ஆலயப்பதி பரத குலத்தவருக்கும், யாழ்ப்பாணக்குடாநாட்டில் சகல பகுதிகளிலும் வாழும் மீனவர்களுக்கும் இன்றியமையாத திருத்தலமாய் விளங்கி அன்னவர்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய யாழ்ப்பாண வைபவ விமர்சனம், இராசநாயகம் முதலியாரின் யாழ்ப்பாணச் சரித்திரம் முதலியவற்றை ஆராயும்போது போர்த்துக்கேயர் நம்நாட்டில் காலடிவைத்தநாள் முதல் கத்தோலிக்க திருமறை வளர்ந்து அதன் நிழலைப்பரப்பி அநேக கரை தன்பால் இழுத்ததென்பது தெளிவு.

16ம் நூற்றுண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய காலத்தில் அவ்அரசின் பாதுகாப்புக்காகப் பல்வேறு இடங்களிலும், விசேடமாய் கடலோரங்களில் கோட்டைகளை அமைத்

## எஸ். எம். யோசெவ்

போற்றிப்புகழ்ந்து பக்திப் பரவசமாய்ப்பரவும் அன்னையாய் விளங்கி அருள்பாலித்து வருகின்றார் சித்தாத்திரை அன்னை. மூன்று சமயத்தவர்களும் அமைதியாகவு சௌஜன்யமாகவும் வாழ்ந்து வரும்கிராமம் சாட்டி. கிழக்கே முஸ்லிம்களின் சிறப்புமிக்க பள்ளிவாசல் உண்டு. தெற்கிலும் வடக்கிலும் இந்து ஆலயங்கள் உள.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு சுகஸ்தானமாய் விளங்கும் சாட்டி, உல்லாசப் பிரயாணிகளையும், சுற்றுலாப் பிரியர்களையும் பெரிதும் கவர்ந்துவருகின்றது. விடுமுறைக் காலத்தை அமைதியாகக் கழிக்க விருப்புவோர்க்கு அருமையான ஓரிடம் சாட்டி.

தனர். அவ்வாறே சாட்டியிலும் ஒரு கோட்டையை அமைத்தனர். அங்கு தங்கள் வணக்கஅறையில் இந்த மாதா சுரூபத்தை வைத்து வணங்கினர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டி முதலாம் இடங்களில் வேதபோதகஞ்செய்தவர் கண்ணுடிச் சுவாமியார் என அறியப்பட்ட வண. பேதுருகே பெற்றங்கோர் சுவாமியார் ஆவார். அவர் அல்லைப்பிட்டியிலும் வேலணையிலும் ஆலயங்கள் சட்டினார். ஆனால் இதற்கு முன்னரே சாட்டிக்கோட்டையில இறை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன. சாட்டியில் இருந்த போர்த்துக்கேயர் கோட்டை ஒல்லாந்தர் காலத்தில் தகர்க்கப்பட்டது. அவ்வேளை மாதா சுரூபதைக் கிணற்றிலே போட்டுவிட்டு ஓடிச்சென்றனர் என்றும் 200 வருடங்களின் முன் இச்சுரூபம் கண்டெடுக்கப்பட்டுஅழிந்துபோன கோட்டையின் மத்தியில் ஒரு ஓலைக்குடிசையில் பூச்சியமாய் வைத்து வணக்கப்பட்டுவந்தது என்றும் கூறுவர். இடும்பர் குடும்பத்தைச சேர்ந்த மூத்தவி என்பவர் வைராக்கியமுள்ள சிறந்த கத்தோலிக்கர். வருடா வருடம் அவர் மிகவும் பிரயாசைப்பட்டு மாதாவுக்கு வழிபாடு செய்துவந்தார். மூத்தவி ஒருதடி நுனியில் மணிஒன்றைக்கட்டி அடித்தடித்து

[9-ம் பக்கம் பார்க்க]

## நான்போனல்!

பல்லாண்டு காலங்களாக கடுந்தவம் புரிந்த இரு முனிவர்களுக்கு இடையே ஒரு நாள் காலையில் ஆற்றங்கரையில் சந்திப்பு ஏற்பட்டது. அப்பொழுது முதலாவது முனிவர்: ''பல்லாண்டு காலம் இறைவனையே நினைத்து தவம்புரிந்துவருகிறேன் ஆசையால் நானே முதலில் இறைவனை அடைவேன்'' என்றார். இரண்டாவது முனிவர்: ''உமது தவத்தைக் காட்டிலும் என் தவம் கடுமையானது. அதன் வலிமையினை நான் பெற்றுள்ளேன். நான்தான் முதலில் இறைவனை அடைவேன்'' என்றார்.

இருவருக்குமிடையே நீராடுவதை மறந்து வாக்குவாதம் முற்றியது. இதனைக் கேட்டுக் கொண்டு ஆற்றில் தண்ணீர்அள்ளவந்த தபோவன வாசியான இளம் பெண் ஒருத்தி அடக்கமாக முனிவர்களைப் பார்த்து கூறினாள்: ''ரிஷிமகான்களே! நீங்கள் இருவரும் நான் போனல நிச்சயமாக இறைவனை அடையலாம்'' என்று சொல்லிப் போய்விட்டாள் அவ்விடத்தைவிட்டு. முனிவர்கள் இருவருக்கும் ஒரே குழப்பம். இவள் யார்? இவளுக்கும் எங்களுக்குமிடையே ஒரு தொடர்பும் இல்லையே! என்று இருவரும் அப்பெண்ணையே கேட்டுக் குழப்பத்தைத் தீர்ப்போம் என அவள் போன வழியில் விரைந்து சென்று அவளைக் கண்டு இதுபற்றி விசாரித்தார்கள்.

''நான் போனல்-நான்என்னும் அகந்தை போனல் நிச்சயமாக நீங்கள் இறைவனை அடையலாம்'' என்று அவள் விளக்கம் கூறினள். —அருள்

## திரைகடல்

சிங்களப் படங்கள் தணிக்கைசெய்யப்பட்டு, தியேட்டருக்காகக் 'கியூ'வில் நின்றாலும், அவர்களுக்கு நாங்களும் சளைத்தவர்களல்ல என்ற தோரணையில் ஏராளமான தமிழ்ப்படங்களும் தயாரிப்பிலிருக்கின்றன. முன்பெல்லாம் ஒரு தமிழ்ப்படம் தயாரிப்பது சம்பந்தமான செய்திகளும் அது சம்பந்தமான புகைப்படங்களும்இருந்திருந்து வெளியாகும் ஆனல் இன்றோ நிலை தலைகீழாக மாறிவிட்டது எந்தப் பத்திரிகையை, வாரமலரை விரித்தாலும் ஏதாவது தமிழ்ப்படம் சம்பந்தமான ஸ்டில்'களும் பிரசுரமாகியிருக்கின்றன. சென்ற வாரம் ஒரு வார இதழின் பின்பக்கத்தில் ஒரு தமிழ்த் திரைப்படம் பற்றிய ஏராளமான 'ஸ்டில்'கள் வெளியாகியிருந்தன. ஏன் ஆங்கிலப் பத்திரிகைகளிலும்கூட தமிழ்ப் படங்கள் சம்பந்தமான செய்திகள் வெளியாகவேசெய்கின்றன இவற்றையெல்லாம்பார்க்கும்போது திகைப்பே ஏற்படுகிறது. 'தமிழகமோ?' என ஐயுறவேண்டியிருக்கிறது. இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் எமது தயாரிப்புக்கள் தோல்விமேல் தோல்வியைத் தழுவியும்கூட ஏராளமான தயாரிப்புக்கள் உருவாகியே வருகின்றன. அவர்களின் துணிச்சலைப் பாராட்டத்தான்வேண்டும், ஆனல் அது விழலுக்கிறைத்த நீராகிவிடுகிறதே.

துணிச்சல் இருக்கிறது. பணமும் இருக்கிறது. படமும் எடுக்கிறார்கள். ஆனல் எடுக்கத் தெரியவில்லையே! ஏராளமான படங்களை வேகம்வேமாக எடுத்து டப்பாவுக்குள் அனுப்புவதைவிட ஓரிரண்டு படங்களை சிறப்பாக எடுத்து ஏதோ கொஞ்சம்பணம்உழைக்கலாமே! எமது தமிழ்ப்படங்கள் படுதோல்வியடைவதற்கான காரணங்களைப் பல கட்டுரைகள்மூலம் தெளிவுபடுத்தியிருந்தேன். அதில் மிகப்பிரதானமாக கதாநாயக, நாயகியரின் பங்குபற்றியும் குறிப்பிட்டிருந்தேன் இனியாவது தயாரிப்பாளர்களும் கதாசிரியர்களும், கதாநாயகர்களாக நடிப்பதைத்தவிர்த்துக்கொண்டால் ஈழத்து சினிமா உலகில் விடிவெள்ளிபூக்கும்.

தற்போது எமது நாட்டில் ஏமாளிகள், அனுராகம்,நெஞ்சுக்குத் தெரியும், நெஞ்சுக்கு நீதி, ஆத்மாவின் ராகங்கள், புளுகர்கள் ஜாக்கிரதை, நான் உங்களில் ஒருவன், அப்பப்பா எவ்வளவு படங்கள்! எவ்வளவு படங்கள்!

இவைகளுள் நான் உங்ளில் ஒருவனில், வெண்ணிற ஆடை நிர்மலா நடிக்கிறா 'நெஞ்சுக்குநீதி'யில் ஸ்ரீகாந்த், மற்றும் மலேசிய டெலிவிஷன் நடிகர் 'சிவாஜிராஜா' ஆகியோரோடு முக்கிய பாத்திரத்தில் டீன்குமார் நடிக்கிறார். சுண்டிக்குளி சோமசேகரன் நெறிப்படுத்த அவரது மனைவி மாலினி படத்தைத் தயாரிக்கிறார். இவர்கள் டாக்ஸிடிரைவர், லண்டன் ஹாடு முதலிய படங்களை எடுத்திருக்கிறார்கள். மலேசிய சினிமா உலகுடன் நல்ல தொடர்பு வைத்திருக்கிறார்கள். படமும் எடுக்கத் தெரிந்தவர்கள் நல்லமுகவெட்டுள்ள டீன்குமாரைக் கதாநாயகனகப் போட்டிருக்கிறார்கள். (தயாரிப்பாளரோ, டைரக்டரோ, வசனகர்த்தாவோ, கதாநாயக, நாயகிகளாக நடிக்கவில்லை) இந்தப் படம் நல்லதொரு 'எண்டடைன்ஸ்மெண்ட்' படமாகவே அமையும் என்று நம்பலாம்.

'ஏமாளிகள்' திரைக்கு வரக் காத்திருக்கிறது. பாமா விஜயத்தின் நகல் அது,கோமாளிச் கோஷ்டியினர் நடித்திருக்கிறார்கள் அப்துல் ஹமீட் நீங்கலாக. ஓடுமா அல்லது ஒட்டப்படுமா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

சிறந்த கதாசிரியரும், நடிகருமான கலைச்செல்வன், டீன்குமாரோடு சேர்ந்து 'நான் உங்களில் ஒருவனை' எடுக்கிறார். வெண்ணிற ஆடை நிர்மலா கதாநாயகியாக நடிக்கிறார். சென்றவாரம் மன்னார் வாசகர் வட்டத்தில் கலைச்செல்வன் உரையாற்றும்போது ''எழுபத்தைந்து நாட்கள் படம் ஓடாவிட்டால் தான் பேனு பிடிப்பதில்லை என்றும் டீன்குமார் நடிப்பதில்லை'' என்றும் சபதம் செய்தார். கவலையடைந்த ரசிகர் ஒருவர் சபதத்தை 'வாபஸ்' பெறும்படி வேண்டியபொழுது, நிச்சயம் என்படம் எழுபத்தைந்துநாட்களுக்குமேல் ஓடத்தான் போகிறது இருந்து பாருங்களேன்'' என்று கூறினார். பொதுமக்கள்கரகோஷம் செய்துஆதரவுகொடுத்தார்கள்

கதாநாயகனுக்கேற்ற முகவெட்டும் நடிப்புத்திறமையும் மிக்க சின்னையா. டீன்குமார், கே. எஸ். பாலச்சந்திரன், விக்னேஸ்வரராஜா ஆகியோரைத் தயாரிப்பாளர்கள் பயன்படுத்தவேண்டும்.

-திரையன்

## மேடையில் 'புவனு ஒரு கேள்விக் குறி'

பல சிறந்த நாடகங்கள் என்று ரசிகர்களால் பாராட்டப்பட்டதும், பல நாடகப் போட்டிகளில்கலந்துகொண்டு தங்கப்பதக்கங்கள் பரிசு பெற்றதுமான 'ஒளி பிறந்தபோது' 'ஊர்க்கோலம்', 'மயக்கம் என்ன?', 'பூஞ்சிட்டுக்கன்னங்கள்', 'நல்ல மனம் வாழ்க' 'ஓடம் நதியினிலே' போன்ற பல சிறந்த நாடகங்களை வடமாநிலம் மட்டுமல்லாது, கொழும்பு, அநுராதபுரம், போன்ற இடங்களில் எல்லாம் பல தடவைகள் மேடையேற்றி வரும் யாழ்.சென்.ஜேக் சனசமூகநிலையவான்மதிகலாலயத்தினர், தமது 59வது தயாரிப்பாக தமிழகத்தில் பிரபல நடிகர்களான ரஜனிகாந்த், சிவகுமார், சுமித்திரா போன்றோரால் நடிக்கப்பெற்று மகரிஷியால் நாவலாகி திரைப்படமாக வெளிவந்து, பத்திரிகைகளினதும்- ரசிகர்களினதும், அமோக ஆதரவைப்பெற்ற 'புவனு ஒரு கேள்விக்குறி?' திரைப்படத்தை அதே பெயருடன் நாடகமாகத்தயாரித்துப பல சிறந்த நாடகங்களுக்குக் கதைவசனம் எழுதி, டைரக்ஷன் செய்த 'கலைத்தென்றல்' வி. எம். ஜெருட்டின் மேடை வசனத்துடனும், டைரக்ஷனிலும், மேடையேற்றப்பட்டது

யாழ். நகரின் இலைமறைகாய்களாய் இருக்கும் நமது ஈழத்துக் கலைஞர்கள் வரிசையில் கலைச்சுடர் எம். எஸ். பெனடிக்ற், வி. மரியதாஸ், ஆர். ஜே. சீலன், ஜே. ஏ. சேகர், குண்ரத்தினம், சௌந்தரராஜன், பாபு, வி. எம். இராசேந்திரம் போன்ற முன்னணிக் கலைஞர்களைக்கொண்டு வெற்றிபெற்ற இந்நாடகத்தை பாஷையூரிலும், இம்மாதம் 30ம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு முன்பாக அமைந்த வயல் மைதானத்திலும் மேடையேற்றுகின்றார்கள்.

-ரசிகன்

## டீன்குமாருடன் தென்னக நடிகை நடிப்பார்!

பிரபல சிங்கள, தமிழ் திரைப்பட நடிகர் டீன்குமாரும், தென்னிந்திய திரைப்பட நடிகை ஒருவரும் இணைந்து நடிக்கும் 'நான் உங்களில் ஒருவன்' திரைப்படத்தின் படப்பிடிப்பு இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

நாடகக்கலைஞர் அந்தனி ஜீவாவின் 'அக்கினிப் பூக்கள்' நாடகமே கதாசிரியர் கலைச்செல்வன் கதை வசனத்தில் 'நான் உங்களில் ஒருவனுக' உருவாகியுள்ளது. இந்தத் திரைப்படப் பிரதிக்கு அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் 'பி' கிறேட்டிங் அனுமதி வழங்கியுள்ளது. (வெள்.நி)

## அன்றொருநாளில் மேஜர் சுந்தரராஜன்

பிரபல தென்னிந்திய நடிகர் மேஜர் சுந்தரராஜன் கௌரவ நடிகராக நடிக்கும் விஜயா சினி ஆர்ட்ஸின் ''அன்றொருநாள்'' திரைப்படத்தின் படப்பிடிப்பு கொழும்பில் நடைபெற்றது.

நடிகர் 'மேஜர்' சுந்தரராஜன் நடிக்கும் காட்சிகளுக்கான படப்பிடிப்பு நடைபெற்றது. மேஜர் சுந்தரராஜன், டாக்டர் இந்திரகுமார், விஜயாம்பிகை சம்பந்தப்பட்ட படக் காட்சிகளை டைரக்டரும், கமிரா நிபுணருமான ஏ. வி. எம். வாசகம படமாக்கினர். இவருக்கு உதவியாக பி. எஸ். நாகலிங்கம், ஜெ. பி. ரொபட் பணியாற்றினர்கள். (வெள்-நி)

## வி.பி. கணேசனின் சிங்களப்படம்

'புதிய காற்று', 'நான் உங்கள் தோழன்' திரைப்படத் தயாரிப்பாளரும் நடிகருமான வி. பி. கணேசன் சிங்களத் திரைப்படமொன்றைத் தயாரிக்கும் முயற்சியிலீடுபட்டுள்ளார். மேற்படி திரைப்படத்தில் தமிழ் நடிகர்களுக்கே அதிக வாய்ப்பளிக்கப்படும் என்று வி. பி. கணேசன் கூறினர்.

அக்டோபர் மாதம் கணேஷ் பிலிம்ஸாரின் சிங்களப்பட பிடிப்புகள் ஆரம்பமாகும்

(வெள்-நி)

# அன்புத் தோழன்

-சி. வி. குணசேகரம்-

(5)

பட்டத்து வாளுடன் கம்பீரமாக நின்ற விக்கிரமனை ஆவலோடு பார்த்தார் மன்னர் மகேந்திரபூபதி. அவன் நின்ற கோலம் அவர்கண்களைநிறைத்தது. விக்கிரமன் கட்டாயம் கொள்ளிக்காடனை அழித்து நாட்டைக் காப்பான் என்ற நம்பிக்கை அவரது மனதில் எழுந்தது.

''விக்கிரமா இதுநாள்வரையும் உனக்குத் தெரியாத ஓர் இரகசியத்தைக் கூறப்போகிறேன்...'' என்ற மன்னர் சுற்றியிருந்த வைத்தியர்களைப்பார்த்தார். அவர்கள் மன்னரின் குறிப்பறிந்து விலகிக்கொண்டனர்.

மீண்டும் ஒருமுறை மண்டபத்தை நோட்டமிட்ட மன்னர், ''விக்கிரமா எனது பாட்டனர் இந்திரனிடம்வரமொன்றைப் பெறுவதற்காக கடுந்தவம் செய்தார் அவரின்தவத்தின் பெருமையை உணர்ந்த இந்திரன் அவர்முன் பிரசன்னமாகி, அவர் காதினுள் ஒருமந்திரத்தை ஓதினன். அந்த மந்திரத்தை வேறெருவருக்குக் கூறுதிருக்கும்வரை அவரை மரணம் நெருங்கமாட்டாது. எனது தந்தையார், எனக்கு உபதேசித்த மந்திரத்தை இப்பொழுது உனக்குக் கூறப் போகிறேன். அருகில்வா'' என்றார்.

விக்கிரமன் மன்னரின் உதட்டினருகே தனது காதை வைத்தான்.

'விக்கிரமா இந்திரனைப் பிரார்த்தி'' என்றார் மன்னர்.

விக்கிரமன் இந்திரனைப் பிரார்த்தித்தான். மன்னர் அவன் செவியினுள் மந்திரத்தைச் சொன்னர்.

மறுகணம் பயங்கரஒலி கேட்டது. மண்டபமெங்கும் புகை எழுந்தது. விக்கிரமன் கண்களை இறுக மூடிக்கொண்டான்.

''குழந்தாய் கண்களைத் திறந்துபார். நான் உனக்கு உதவிசெய்யவந்திருக்கிறேன்'' என்று ஓர் இனிய குரல் கேட்டது.

விக்கிரமன் கண்களைத் திறந்து பார்த்தான். அவன் எதிரே புன்முறுவலோடு இந்திரன் காட்சி கொடுத்தான்.

''விக்கிரமா எனது சக்தியைப் பெற்ற மகேந்திரபூபதியைக் கொள்ளிக்காடன் வெட்டியதால் எனக்குத்தான் அவமானம் ஏற்பட்டுள்ளது. அவனை அழிக்க நான் உனக்கு உதவிசெய்வேன் அஞ்சாதே'' என்றான் இந்திரன்.

விக்கிரமன் இந்திரனது பாதங்களைத் தொட்டு வணங்கினன். இந்திரன் அவனை ஆசீர்வதித்துவிட்டு மறைந்தான். இந்திரன் மறைந்ததும் மன்னரது உயிரும் உடலை விட்டுப்பிரிந்தது.

விக்கிரமன் மன்னரின் சயன மண்டபத்தைவிட்டு வெளியே வந்தான். மண்டபவாசலை ஒரு வீரன் காவல் செய்துகொண்டிருந்தான்.

கொலு மண்டபத்தில் மந்திரிசபைக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. முதல் அமைச்சர், முப்படைத்தளபதிகள், மன்னரின் சகோதரன் மார்த்தாண்டபூபதி முதலியோர் அங்கே அமர்ந்திருந்தனர்.

மூலைக்கு மூலை தீப்பந்தங்கள் கனன்றுஎரிந்தன. கொலுமண்டபத்தில் யோசனையோடு உலவிய விக்கிரமன் சாளரத்தின் வழியாக எட்டிப்பார்த்தான். காவல் பலமாக இருந்தது.

திரும்பி வந்து ஆசனத்தில் அமர்ந்த விக்கிரமன், ''மன்னர் இந்த இக்கட்டான நேரத்தில் எம்மையெல்லாம் தவிக்க விட்டுச்சென்றுவிட்டார். அவரது இழப்பு ஈடுசெய்யமுடியாதது. கொள்ளிக்காடனின் அட்டகாசத்தால் நாடே அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மன்னரையும் கொள்ளிக்காடன் கொன்றுவிட்டான் என்ற செய்தியை மக்கள் அறிந்தால் அச்சத்தால் நாட்டைவிட்டே ஓடத்தலைப் பட்டுவிடுவார்கள். எனவே மன்னர் கொலையுண்ட செய்தி பரம இரகசியமாக இருக்கட்டும். மன்னரின் உடலைத்தலை மிட்டு பாதுகாப்பாக வைத்திருக்கும்படி அரண்மனை வைத்தியர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். அதோடு அவர்களை நிலைமை கட்டுக்கடங்கும்வரை அரண்மனையைவிட்டு வெளிபேற அனுமதிக்கமாட்டேன் பொதுவைபவங்களில் மன்னர் சுகவீனம் காரணமாக கலந்து கொள்ளமாட்டார் என்று அறிவிக்க உத்தேசித்துள்ளேன்'' என்று மூச்சுவிடாமல் கூறினன் விக்கிரமன்.

சிறிது நேர அமைதிக்குப் பின்பு மீண்டும் விக்கிரமனே பேசினன். 'இளவரசியை மணக்கவேண்டிய முக்கிய பொறுப்பை மன்னர் என்னிடம் தந்துள்ளார். அதை நிறைவேற்றுவது எனது தலையாய கடன். எனவே நாட்டுப்பொறுப்பை மன்னரின் சகோதரரான மார்த்தாண்ட பூபதியிடம் ஒப்படைக்க எண்ணியுள்ளேன்...'

'இளவரசே' என்று ஏக காலத்தில் பல குரல்கள் எழுந்தன.

'இளவரசே தங்களது இந்த முடிவை மாற்றியமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்' என்றார் முதல் அமைச்சர்.

அதை முப்படைத் தளபதிகளும் ஆமோதித்தனர்.

எல்லோரையும் மார்த்தாண்டபூபதி முறைத்துப் பார்த்தான். பின்பு 'விக்கிரமா எனக்கேன் இந்த வீண் தொல்லைகள். சகோதரன் இறந்த துயர் என்னை வாட்டி வதைக்கிறது. என்னைத் தொல்லைப்படுத்தாதே' என்றான்.

'இந்த ஒரு விஷயத்தில் மட்டும் யாரின் போதனைகளையும் ஏற்க நான் தயாரில்லை. மன்னரது வேண்டுகோள் ஒருபுறமும் தங்கையின் பாசம் மறுபுறமும் என்னைச் சித்திரவதை செய்கிறது...'

விக்கிரமனது பேச்சு மணிவர்மனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. 'இனி என்னென்ன விபரீதங்கள் நடக்கப்போகின்றனவோ...' என்று அவர் அனுபவமுள்ள நெஞ்சு கலங்கியது.

இரண்டாம் ஜாம மணி பலமாக ஒலித்து ஓய்ந்தது.

அப்போது வீரன் ஒருவன் பரபரப்புடன் கொலுமண்டபத்துள் நுழைந்தான். அவன் முகத்தில் சவக்களை தாண்டவமாடியது, 'இளவரசே தீப்பந்தம் ஒன்று அரண்மனை வாசலில் கோரமாகச் சிரித்தபடி குறுக்கும் நெடுக்கும் நடமாடுகிறது, அதை எதிர்க்கும் போர்வீரர்களை யெல்லாம் கொன்று குவித்துக்கொண்டிருக்கிறது...'

அப்போது ஊது கொம்புகள் ஒலித்தன. போர்முரசு கொட்டியது. விக்கிரமன் வாளை உருவிக்கொண்டு கொலுமண்டபப் படிகளால் இறங்கி அரண்மனை வாசலை நோக்கி ஓடினன்.

அப்போதும் 'விக்கிரமா எங்கே ஓடுகிறாய்? நில்' என்று வானமே அதிரும் இடியோசை போல்முழங்கியது ஒரு குரல்.

திடுக்கிட்ட விக்கிரமன் சத்தம் வந்த பக்கம் திரும்பினன்.

(அடுத்த எண்ணத்தில்)

# பயத்தினால் அல்ல...

அப்பொழுது நான் ஏழாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறேன். வகுப்பில் நான் ''குழப்படியான மாணவன்'' என்று அநேக ஆசிரியர்கள் வாய்மொழிச் சான்றிதழ் தந்திருந்தார்கள்.

ஒருநாள் கணித பாடம் நடந்துகொண்டிருந்தது. நான் என் அருகில் இருந்த மாணவர்களுடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தேன். அதாவது நானும் படிக்கவில்லை அவர்களையும் படிக்கவிடவில்லை. இதைக் கணித ஆசிரியர் கவனித்துவிட்டார்.

அவருக்குக் கோபம் வந்தது. அதன்பலன் என் கன்னம் இரண்டையும் அவருடைய கைகள் பதம்பார்த்தன.

### நினைவில் நின்றவை

எந்தப் பாடசாலையை எடுத்தாலும்சரி ஆசிரியர்கட்கு ஒரு 'பட்டம்' வைப்பது மாணவர்களுக்கு பிடித்தமான செயல். இந்த வகையில் எங்கள் பாடசாலை மாணவர்கள் சளைத்தவர்கள் அல்ல.

எதிர்பாராத தாக்குதல்களுக்கு உள்ளான நான் அந்தஆசிரியருக்குநாம் வைத்த 'பட்டத்தை' உச்சரித்தேன். அது அந்த ஆசிரியர் செவியில் விழுந்திருக்கவேண்டும். அவர் என்னை ஒருதடவை பார்த்தார். எனக்குப் பயமாக இருந்தது. எனது கன்னத்தை அடிவாங்குவதற்குத் தயாராக்கிக்கொண்டேன். ஆனால் ஆசிரியர் மேலே படிப்பிக்க ஆரம்பித்தார்.

வகுப்பு முடிந்தது. இடைவேளை.

அந்தக் கணித ஆசிரியர் என்னை அழைத்தார். நான் பயத்துடன் அவரிடம் சென்றேன், அவர் என் முதுகில் கையை வைத்தபடி ''தம்பி'' உன்மேல் எனக்கு என்றுமே பற்று உண்டு. கோபத்தில் அடித்துவிட்டேன். இனிமேல் குழப்படி விடாது படிக்க வேண்டும்.'' என்றார் அன்பாக?

என், கண்கள் கலங்கியது. அடிக்குப் பயந்து அல்ல, அந்த ஆசிரிய தெய்வத்தின் பாசத்துக்குப் பயந்து.

இந்தச்சம்பவத்தையும் தெய்வத்துக்குச் சமமான அந்த ஆசிரியரையும் என்னால் மறக்கவே முடியாது.

யோ. பாலேஸ்வரன்
இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி,
(க. பொ. த. உயர்தரம்)

# மாணவர் எண்ணம்

கண்டோஸ்

### மூளைக்கு வேலை

ஒரு தாமரைக்குளத்தில் முதலில் ஒரு பூ மலர்ந்தது. தொடர்ந்து பூக்கள் நிமிடத்துக்கொருதடவை இரு மடங்காக அதிகரித்து அதிகரித்து மலர்ந்து கொண்டே இருந்தது. அதாவது ஒரு நிமிடத்தில் இரு பூக்களாகவும் இரு நிமிடத்தில் 4 ஆகவும் மூன்று நிமிடத்தில் 8 ஆகவும் மலர்ந்துகொண்டிருந்தது. இவ்வாறு மலர்ந்த பூக்களினால் 2 மணித்தியாலத்தில் குளம் நிரம்பியது. அவ்வாறாயின் குளத்தின் அரைவாசி நிரம்ப எவ்வளவு நேரம் எடுக்கும்?

(விடை:- அடுத்த எண்ணத்தில்)

பா. சத்தியேந்திரன்
மகாஜனக் கல்லூரி

## வாரியார் உரையில் ரசித்தவை

நல்ல பொருட்களை விளம்பரம் செய்தால்தான் மக்கள் நாடுகிறார்கள், கெட்டபொருளுக்கு விளம்பரமின்றியே பலர் நாடுவார்கள். பால் விற்பவன் ''பாலோ பால்!'' என்று தெருவழியே உரத்த குரலில் சத்தமிடுகிறான். ஆனால் கள் விற்பவன் அப்படி விளம்பரமாகச் சத்தமிடுவதில்லை எனினும் மக்கள் அங்கு தாமாகவே நாடுகிறார்கள்.

இதுதான் இன்றைய உலக வாழ்வு இத்தகையதுபோலவே மக்களும் ஆன்மீக விடயங்களை விட்டு உலக இன்பங்களில் ஆழ்ந்து போகிறார்கள்.

அக்கிரமம் உலகில் அதிகரிக்கும்போதெல்லாம் இறைவன் தோன்றுவான் என கீதை கூறுகிறது. ஆனால் ஏன் இன்னும் இறைவன் தோன்றவில்லை என்றால் அக்கிரமம் இன்னமும் முற்று முழுதாகப் பெருகவில்லை என்பதே பொருள். அக்கிரமம் முழுது நிறையும்போது மக்களை விடுவிக்க ஆண்டவன் நிச்சயமாகத் தோன்றுவான்.

சிலர் பெண்களை எல்லாம் பேய்கள், பிசாசுகள் என்று வைகிறார்கள். நான் இதனை வெறுப்பவன். பெண்கள் பேய்கள் என்றால், கூறுபவர் தாயும் பேயா? அப்படியாயின் இவர் யார்? பேய்க்கு மகன் என்று தானே பொருள். பெண்களை நாம் தெய்வம் என்றால் நாம் தெய்வ மகன் என்றுதானே பொருள். ஆகவே நாம் பெண்களை தெய்வம் என போற்ற வேண்டும்.

சோதிசொரூபினி
கொக்குவில்
இந்துக்கல்லூரி.

அதிக கவலை இருப்பினும் தூக்கம் வராது. அதிக சந்தோஷம் இருப்பினும் தூக்கம் வராது.

ஏ. ஜெயராஜா
கொக்குவில்
இந்துக்கல்லூரி.

### வளர்ந்துவருகிறது

மாணவர் எண்ணம் என்ற பகுதி நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. தரம் உயர்கிறது. ஆனால் அரைப்பக்கம்போதாது முழுப்பக்கமாக்குங்கள். சிறுகதைகள், பாட்டுக்களையும் பிரசுரியுங்கள்.

து. மங்களகௌரி
கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி

### வானவில்!

வானவில்லை,மழையும் வெய்யிலும் ஒரே சமயத்தில் ஏற்படும்போதுதான் காணமுடிகிறது.

வானில் மழைநீர்த்துளிகளினூடு சூரியனின் ஒளிக்கற்றைகள் சென்று முறிவடைகிறது. அப்போது அங்கு நீர்த்துளிகள் ஓர் அரியமாகத் தொழிற்பட்டு பல அழகிய நிறங்களைக்கொண்ட வானவில்லை கொடுக்கிறது.

வானவில் காலையில் 7-30க்கு முன்பும், பிற்பகல் 3-30க்குப் பின்புமே ஏற்படுகிறது.

வானவில் சூரியன் இருக்கும் திசைக்கு சரி எதிர்த்திசையிலேயே ஏற்படுகிறது. எங்கே நீங்களும் அவதானித்துப் பாருங்களேன்!

விசாலி. சந்திரகுமார்
யாழ். மத்தியகல்லூரி.

### அலையிலொரு துளியானேன்

அழகுமிகு நல்லூரில்
அடியார் கூட்டம்
அருள்பெறவே
முருகனிடம்
அலையாய் வந்தார்
அலையிலொரு துளியாக
அடியேன் சென்றேன்
அற்புதத்தைக் கண்டேனே
அருள்பெற்றேனே.

செல்வி
நவரெட்ணம் மனோகரி

### விவசாயத்தை விருத்தி செய்யுங்கள்

வினா

1. தாவரங்களுக்கு வேண்டிய முக்கிய 3 உணவுச்சத்துக்கள் யாவை?
2. வீட்டுத்தோட்டத்தில் வளர்ந்துவிரைவில் பலன் தரக்கூடிய பழமரம் யாது?
3. கோழிக்கு அம்மைப்பால் எப்போது கட்ட வேண்டும்?
4. எலுமிச்சம் புளியைப் பாதுகாத்து வைப்பதற்கு என்ன பொருளை உபயோகிக்கலாம்?
5. 'ஈழத்து உணவும் காலத்து ஆக்கமும்' என்ற பாடல் கொண்ட நூல் எது?
6. தோடம்பழச்சாற்றில் அதிகமாகவுள்ள உயிர்ச் சத்து எது?
7. இலங்கையில் காணப்படும் மிகப் பெரிய இலையுள்ள தாவரம் எது?
8. நாட்டாயிரம் பட்டாயிரம் என்பது எம் மரத்தை?
9. மிளகாய் எந்நாட்டுச் செடி?
10. பூஞ்சணத்திலிருந்து தயாராகும் பிரபல்யமான மருந்து எது?

விடை

1. நைதரசன். பொசுபேற்று. பொட்டாசு.
2. பப்பாசி.
3. இரண்டு கிழமை வயதில்.
4. பொட்டாசியம் மெற்றுபைசல் பைற். (Potassium Meta Bisul Phite.)
5. பட்டினப்பாலை.
6. விற்றமின் C.
7. தளபத்து.
8. பனை.
9. அமெரிக்கா.
10. பென்சிலின்.

செல்வி செ. ராதா
வேம்படி
மகளிர் கல்லூரி.

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
**ராமன் தேடிய சீதை**

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
எம்.ஆர்.ராதா - பத்மினி
**சி த் தி**

**வின்ஸர்** போன்: 466 தினசரி • காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-சோ
நடித்த
**ஒரு தாய் மக்கள்**
(புதிய பிரதி)

**REGAL** (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00.& 9-30 p. m.
Glendo Jackson, Oliver Reed in
**THE TRIPLE ECHO**
(Color-adults only)

தினசரி 4 காட்சிகள் 131-வது தினமாக;
**ராணி** (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) கடைசி சில தினங்கள்
தினசரி 4 காட்சிகள
சிவாஜி-விஜயகுமாரி-எஸ்.எஸ்.ஆர்.-தேவிகா
நடித்த
**சா ந் தி**

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி - எஸ்.எஸ்.ஆர். விஜயகுமாரி
**குங்குமம்** (புதிய பிரதி)
25 முதல் ஜெய்சங்கர் **நீலகிரி எக்ஸ்பிரஸ்** (புதிய பிரதி)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
**ஆ ல ய ம ணி**
(புதியபிரதி)

**லிடோ** (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
**தாய்க்குத்தலைமகன்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜமுனா
நடித்த
**பொம்மைக்கல்யாணம்**
[புத்தம் புதிய பிரதி]

என்றுவரும் என நாளை எண்ணிக் காத்திருந்த ரசிகர்களின் நெஞ்சம்தனை கொள்ளை கொள்ள யாழ்.நகரில் இதுவே கடைசிமுறையாக மீண்டும் சிம்மக்குரலோனின் சிற்றம் வெண்திரையில்

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் சிவாஜிகணேசன் கிரிஜா-கண்ணம்மா
T. R. ராஜகுமாரி S. A. நடராஜன் நடித்த
**மனோகரா** (புத்தம் புதிய பிரதி)
ஃ பொறுத்ததுபோதும் பொங்கிஎழு மகனே!
ஃ இது உன்தாயின் ஆணை!
ஃ என்னை அழைத்துவரவில்லை சங்கிலியால் கட்டி சபைநடுவே இழுத்துவந்துள்ளார்கள் தந்தையே!
கதை-வசனம் முத்தமிழ்காவலன் 'கலைஞர்' கருணாநிதி

## சாட்டி......

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்றுறை, நாராந்தனை அல்லைப்பிட்டிக் கிராமங்களுக்குச் சென்று சனங்களை அழைத்துச் சேர்த்து சாட்டிக் கோட்டைக்கு கால்நடையாக யாத்திரை மேற்கொண்டு அங்கு மூன்று நாட்கள் தங்கி வழிபாடு நடத்தியபின் வீடு மீள்வர்.

பல ஆண்டுகள் இவ்வண்ணம் நடைபெற்று வந்தது. காலப்போக்கில் பக்தர்கள் தொகை அதிகரித்தது. அன்னையின் அருளை அபரிமிதமாகப் பெற்ற மக்கள் அவளுக்கு ஒரு ஆலயத்தை அமைக்க முன்வந்தனர். 1789ம் ஆண்டு ஒரு சிறிய ஆலயத்தைக் கல்லால் அமைத்தார்கள். இச்சிறு ஆலயம் 1860ல் எரிந்துபோயிற்று. எனினும் தேவதாயின் திருச்சுரூபம் அற்புதமாய்த்தப்பியது. 1928ம் ஆண்டு வண. அந்தோனி என்னும் குரவரின் முயற்சியால் காலஞ் சென்ற கியோமார் ஆண்டகை அவர்கள் புதிய ஆலயம் அமைக்க மனமிசைந்து கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இன்று நாம் காணும் புதிய ஆலயம் விரைவில் முற்றுப்பெற்றிருந்த வேளை 1946ம் ஆண்டில் ஆலய முகப்பில் போட்டிக்கோ எனப்படும் திறந்த அரங்கு ஆராதனைகளுக்கான அழகிய மண்டபம் கட்டப்பட்டது. கரபொனூரைச் சேர்ந்த திரு. எம். எஸ். பஸ்ரியன் அவர்களே போட்டிக்கோ மண்டபத்தைக் கட்டிக்கொடுத்தவராவார். நீர்கொழும்பு பிரபல வர்த்தகர் காலஞ் சென்ற திரு. எம். எஸ். மந்திரியவர்கள் ஆலயத்தின் மின்சார இணைப்புக்குவேண்டிய உதவிகளைச் செய்தார்.

ஆண்டு தோறும் புரட்டாதி மாதம் 24ந் தேதி நடைபெறும் சிந்தாத்திரை மாதா ஆலய வருடாந்த மகோற்சவம், பக்தர்களின் வசதிக்காக புரட்டாதி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டு வருகின்றது. 15-9-78 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமான நவதின வழிபாடுகள் 24-9-78 ஞாயிறு காலை பெரியபாடற் பூசையுடனும் தேவதாயின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் நிறைவெய்தும்.

## வாரியார்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வென்று சொல்வது?' எப்படியாவது, என்ன பொய் சொல்லியாவது, எப்படி ஏமாற்றியாவது இந்த மனித மந்தைகளிடமிருந்து முருகன் திருப்பணிக்குக் கறக்கக் கூடியளவும் கறந்து விடவேண்டும் என்று வாரியார் நினைக்கின்றார் என்று எண்ணத் தோன்றவில்லையா?

இதற்குப் பிறகு—

அந்த முருக பக்தர் பத்து இலட்சம் ரூபாயைக்கொண்டு வந்துதன்னுடைய மனைவிக்குத் தெரியாமல் இரும்புப்பெட்டியிலே பூட்டிவைத்தாரல்லவா? ['ஏனப்பாசெய்தார்?' என்று வாரியார் கேட்கிறார். அவருடைய சொற்பொழிவுகளை ஒழுங்காகக் கேட்டதனால் போலும் ஒரு புத்திசாலிப் பையன் 'மனைவிக்குத் தெரிந்தால் ஊரெங்கும் பரவிவிடும்' என்று பதில் சொல்கிறான். தமக்கே உரிய மந்தகாசமான சிரிப்பை உதிர்த்த வாரியார் 'பார்த்தீங்களா, இந்தப் பையனுக்கே விஷயம் தெரிந்திருக்கிறதே' என்றார் [

பிறகு சொல்கிறார்;

அந்தப் பக்தர் ஏனப்படிச் செய்தாரென்றால் அவருடைய தகப்பனாரின் உபதேசப்படி 'உற்றதை சொந்த மனைவியிடமும் சொல்லக்கூடாதாம்!'

[சை! எனக்கு மறுபடியும் அந்த நெஞ்சு அரிப்பு!]

'காதலிருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறாரே!'

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன வள்ளுவர் தொடக்கம் சில வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த பாரதியார்வரை 'கணவன்-மனைவி' கருத்தொற்றுமை பற்றி எவ்வளவு உயர்வான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஏதோ சந்தர்ப்பங்களில் ஏதேதோ காரணங்களுக்காக சில பொன்மொழிகளைச் சிலர் உதிர்த்திருக்கலாம். சில புலவர்கள் சில கவிதைகளைக் கூடப்பாடியிருக்கலாம். ஆனல் இன்றைய காலத்திற்கும் எங்கள் சமுதாயத்திற்கும் ஏற்புடைத்தான உத்தம கருத்துக்களைத்தான் பொதுமக்களுக்குப் பிரசங்கிக்கவேண்டுமென்பதை வாரியாருக்கு சொல்லியா கொடுக்க வேண்டும்?

வாரியார் மிகப்பெரிய விருட்சம். ஆனல் அத்தகைய விருட்சத்தில் கூட சில சமயங்களில் சில இடங்களில் சில கொம்புகள் உக்கிப்போகின்றவே[

## தமிழ் காங்கிரஸ்

# தலைவர், செயலாளர் தெரிவு சட்டரீதியற்றது

## 'வட்டு' எம். பி. கடிதம்

]கொழும்பு[

தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோரது தெரிவு சட்டரீதியற்றதும் முறையற்றதும் என்று வட்டுக்கோட்டை எம். பி. யும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொருளாளருமான திரு. தா. திருநாவுக்கரசு காங்கிரஸ் கட்சியின் தற்போதைய தலைவரான திரு. தா. சங்கரப்பிள்ளைக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. தா. சங்கரப்பிள்ளை சட்டத்தரணி என்று முகவரியிடப்பட்டு திரு. திருநாவுக்கரசு எழுதிய கடிதத்தின் விபரம் வருமாறு;

3-9-78ல் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் காங்கிரஸ்கட்சிக்கு சில நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டதாக பத்திரிகை மூலம் அறிந்தேன்.

அக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு விடுத்திருந்த அழைப்பு முறையற்றதென்பதால் நான் அந்த அழைப்பை நிராகரித்தேன்.

1952-ம் ஆண்டு முதல் காங்கிரஸ் கட்சியின் பொருளாளராகப் போட்டியின்றி தொடர்ந்து பதவி வகித்து வரும் எனக்கு சுகயீனம் என்று காரணம்காட்டி எனது பதவிக்கு இருவர் நியமிக்கப் பட்டதாகவும் அறிந்தேன்.

நான் எனது பணியைத் தொடர்ந்துசெய்ய என்றுமே தயங்கியதில்லை எனக்கு இயலாததும் இல்லை. இந்நிலையில் தங்களதும் தங்களைச் சார்ந்தோரினதும் நியமனங்கள் முறையற்றதும், சட்டரீதியற்றதும் என்றே யான் கருதுகிறேன்.

இதன்மூலம் கட்சியின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளையும் என்றே கருதுகிறேன்.

எனக்குப்பதிலாக தற்போது தெரிவுசெய்யப்பட்ட இருவரும் பொருளாளராகப் பணியாற்றவோ, கட்சிக்கு நிதிசேகரிக்கவோ, பற்றுச்சீட்டு வழங்கவோ உரித்துடையவரல்லர்.

இக்கடிதப்பிரதிகள் சித்தன் கேணியைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. எம்.கே. சுப்பிரமணியத்துக்கும், சட்டத்தரணி திரு. சங்கரப்பிள்ளை மேற்பார்த்து சட்டத்தரணி ஜனுப் யூசுப்புக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. [ம-இ]



## வட பகுதி கைத்தொழிலாளருக்கு

# இலங்கை வங்கியும் கைத்தொழில் அபிவிருத்தி சபையும் கடனுதவி

(யர்ழ்ப்பாணம்)

வடபகுதியில் பரந்தளவில் கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும். தொழில்நுட்ப அனுபவம்பெற்ற இளைஞர்கள் சுயமரக கைத்தொழில்முயற்சிகளை ஆரம்பிக்கவும், வட பிரதேச இலங்கை வங்கியும், வடபிரதேச கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் கூட்டாக கடனுதவிவழங்கும் திட்டத்தை வகுத்துள்ளன. இத்திட்டம் ''கைத்தொழில் நுட்பமய திட்டம்'' என்று அழைக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 22 வயதுக்கும் 35 வயதுக்குமுட்பட்டவர்களுக்கு வழங்கப்படும். ஏனையோருக்கு தொழில் முயற்சியின் ஈடுபாடு குறித்து சலுகையளிக்கப்படும். கடன் பட விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனங்களின் பட்டதாரிகளாகவோ அல்லது 'டிப்ளோமா' பெற்றவர்களாகவோ அல்லது தொழில் நிறுவனங்களில் சேவையாளர்களாகப் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவோர் ஏதாவது ஒரு பிரதான இலங்கை வங்கிக்கிக்கிளையில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கவேண்டும். கைத்தொழில் முயற்சி பற்றிய எதிர்காலத்திட்டங்களை, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச்சபைஅங்கீகரித்த பின்னர் வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். முயற்சிகளை இலங்கை வங்கி வடபிரதேச முகாமையாளரும், வடபிரதேச கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அதிகாரிகளும் நேரடியாக பார்வையிட வசதி செய்யவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பங்காளர்கள் தொழிற்துறைகளில் பங்கு கொள்ளவேண்டும்.

கடனுதவியாக வழங்கப்படும் பணம், புதிய கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கும், புதிய இயந்திர சாதனங்களை இறக்குமதிசெய்வதற்கும், மூலப் பொருள்கள் வழங்குவதல், ஊதியம் வழங்குதல் போன்ற தொழில் முதலீடுகளுக்கும் பயன்படுத்தலாம்.

வங்கியில் பெறப்படும்பணத்திற்கு கடன்படுவோரிடமிருந்து அசையும் அல்லது அசையாத சொத்துக்கள், கடன்பெறுவோருக்கான ஆயுள் காப்புறுதிப் பத்திரம் உறுதிப்படுத்துபவர்கள் மட்டுமே பெறப்படும்.

கடன்கொள்வோர் தாம் பெற்ற கடனை சரியான முறையில் பயன்படுத்துகிறார்களா என்பது பிரதேச வங்கியும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையும், மேற்பார்வை செய்யும். கைத்தொழிலாளர்களின் பொருட்களை சந்தைப் படுத்துவதற்கு கைத்தொழில் அபிவிருத்திச்சபை உதவும் என்றும் அறிவித்துள்ளது. (கெ)

## பொம்மைவெளி சுய உதவி வீடமைப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள பொம்மைவெளியில், தேசிய வீடமைப்புத் திணைக்களம், சுய உதவி வீடமைப்புத்திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளது, இத்திட்டத்தின் கீழ் முதலில் 32 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. விரைவில் மிகுதியான சுமார் 156 குடும்பங்களும் இத்திட்டத்தினுள் கொண்டுவரப்பட்டு மொத்தமாக 188 வீடுகள் அமைக்கப் படும்.

இரு சமூகத்தினருக்கிடையில் கடந்த மார்ச் மாதம் கலவரத்கின் போது பொம்மை வெளியில் 32 வீடுகள் தீக்கிரையாகின, யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், முன்னாள் அரசாங்க அதிபர் திரு' ஏ, ஏ. ஜோசப், ஆகியோரது முயற்சியாலும், யாழ்ப்பாணம் முஸ்லிய் அபிவிருத்திச்சங்கம் மேற்கொண்ட முயற்சியாலும் எரிந்த குடிசைகளுக்குப் பதிலாகக் கல்வீடுகளைச்கட்டிக் கொடுக்கும் இத்திட்டம் இன்று அமுல்செய்யப்படுகிறது.

இவ்வீடமைப்புத் திட்டத்துசகான அங்குரார்ப்பண விழா இன்று பிற்பகல் நடைபெறும், யாழ். எம். பி. திரு. வெ யோகேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ, யாழ். மாவட்ட வீடமைப்பு ஆணையாளர் திரு. எம். ராஜரத்தினம், முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் திரு ஏ ஏ ஜோசப், திருக்குர் ஆன் விரிவுரையா அல்ஹாஜ் என். எம். மீரான் முகதின் ஆலிம், யாழ்.முஸ்லிம் அபிவிருத்திச் சங்கப்போஷகர் ஜனாப் கே. என். எம். மீரான் சாஹிபு ஆகியோரும் அத்திபாரக்கல் நாட்டுவார்கள். (கெ)

## நியாயமான பேச்சுக்கள் மூலம் பிரச்னையை தீருங்கள்

### வேலை நிறுத்தம்பற்றி சு. க. எம். பி.

(கொழும்பு)

உத்தேச அடையாள வேலை நிறுத்தம் செய்பவர்களுடன் அரசு ஏன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது, நியாயமான பேச்சுவார்த்தைகளின் மூலம் தொழிலாளர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கலாம் தானே.

இவ்வாறு கொத்மலை எம். பி திரு ஆனந்த தசநாயக்கா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

ஒத்திவைப்புப் பிரேரணையின் போது திரு தசநாயக்கா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எதிர்வரும் 28-ம் திகதி நடைபெறவுள்ள உத்தேச வேலைநிறுத்தத்தில் பங்கு கொள்பவர்கள் வெளியேற்றப்பட்டு மறுநாள் புதிய ஆட்கள் நியமிக்கப்படுவார்களென்றும் பிரதமரும் ஜனாதிபதியும் அறிவித்துள்ளனர்.

விஷம்போல் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவைக் குறைக்குமாறு கோரியே இந்த அடையாள வேலைநிறுத்தம் நடைபெறவுள்ளது. தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கவே இவ்வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

### கடந்த அரசு விட்ட தவறை...

வேலைநிறுத்தக்காரர்களுக்கு எதிராக கடந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கையையே தாமும் செய்யப்போவதாக இன்றைய அரசும் அறிவித்துள்ளது. கடந்த அரசு விட்ட தவறை ஏன் இன்றைய அரசும் செய்யவேண்டும் என்பது தான் எமக்குப்புரியவில்லை. இதுதானா தார்மீகம்?

### ஜீவமரணப் போராட்டம்

வேலைநிறுத்தம் செப்பவர்களுக்குப் பதிலாக மறுநாள் புதிய ஊழியர்கள் நியமிக்கப்பட்டால் லட்சக்கணக்கானவர்கள் அதனுல் பாதிக்கப்படுவர். இதனுல் அவர்கள் ஜீவமரணப் போராட்டம் நடத்த வேண்டி ஏற்படும்.

இது முதிர்ச்சியடைந்த தலைவர்களின் முரட்டுத்தன நடவடிக்கையாக இருக்கக் கூடாது.

### ஜனுதிபதியின் அன்றைய பேச்சு...

இன்றைய ஜனுதிபதி அன்றைய பிரதமராகப்பதவி ஏற்ற போது தலதாமாளிகையின் எண்கோண மண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், ஒரு மாத காலத்தில் நாட்டு மக்களின் குறைகள் நீக்கப்படும். அவ்வாறு நீக்கப்படாவிடின் எம்மைப் பதவியிலிருந்து வெளியேற்றலாம்'' என்று கூறினார். இன்று அதைத் தட்டிக் கேட்க மக்களுக்கு உரிமை உண்டு

மக்களைப் பட்டினிவைத்து நாட்டை அபிவிருத்திசெய்ய வேண்டாம், (ம-இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389 - Registered as a Newspaper in SriLanka.

## வேலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப் படும் ஆரம்ப சதியாகும்.

ஜனநாயக நாடுகளில் இது போன்ற சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு தொழிற்சங்க உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனங்களும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன தீர்மானங்களும் இடமளிக்கின்றனவா?

இவ்வேலைநிறுத்தம் குறித்து தங்களுக்குக் தவறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இது குறித்து தாங்கள கூடிய அவதானத்துடன் ஆராய்ந்த பின்னரே எனக்கு அறிவித்திருக்கவேண்டும். (ம-இ)

## தொழும்பில் வீரமணி

[கொழும்பு]

திராவிடர் கழக செயலாளர் திரு. கி. வீரமணி நேற்றுமாலை இலங்கை வந்து சேர்ந்தார்

திரு வீரமணி இன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ் மண்டபத்தில் நடைபெறும் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வார்

## ஏனைய...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

### பூரண பல்கலைக்கழகம்

பல்கலைக்கழக மசோதா அமுலுக்கு வந்ததும் மற்றைய வளாகங்களைப் போன்று யாழ், வளாகமும் தனியானதொரு பல்கலைக்கழகமாகும்.

இவரைத் தொடர்ந்து பேசிய மாணவ மன்றத் தலைவர் ஜெயபாலன், புதிய மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் பரஸ்பரம் அறிந்து கொள்வதை 'ருக்கிங்' என பெற்றோர்கள் கருதக்கூடாது என்றும் ,தற்போது அமுலில் உள்ள மொழிவாரியான தரப் படுத்தலை நீக்கி மாவட்டரீதியான தரப்படுத்தல் முறையை மேற்கொள்ளல்வேண்டு என்றும் கேட்டுக்கொண்டார்.

வளாகத்தலைவர் சு. வித்தியானந்தன் பேசும்போது, புதிய மாணவர்கள் சிரேஷ்ட மாணவர்களை துன்புறுத்தக் கூடாது என்றும் அவ்வாறு யாராவது துன்புறுத்தினுல் கட்டாயம் அவர்கள வளாகத்திலிருந்து நீக்கப்படுவார்கள் என்றுப் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக மானிய குழுத் தலைவர் திரு விஜயசுந்தர, பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. விஜயரத்தின பண்டா, திரு. குணவர்த்தனு. டாக்டர் கல்பகேயுடன் யாழ் வளாகத்திற்கு விஜயம் செப்திருந்தவர், (இ)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

உத்தேச வேலைநிறுத்ம் தொடர்பான கருத்தரங்கொன்று நாளைமாலை அரசாங்க யாழ் லிகிதர் சேவைச்சங்கமனையில் நடைபெறவுள்ளது [கெ-இ]

## பாராளுமன்றத்தில் சிந்தியவை

சிறில் மத்யூ: தமது கணவரைக் கொல்லாமல் கொன்றவர் என்று குறிப்பிடப்பட்ட என். எம். முடன் திருமதி பண்டாரநாயக்கா பந்து விளையாடினர்.

ஒரு குரல்: விக்கட்கீப்பர் யார்?

ஃ ஃ ஃ

பிரதமர்; ஐ. தே. க. அரசைக் கவிழ்க்க வேண்டும் என்று வேலைநிறுத்தம் பற்றிய துண்டுப் பிரசுரம் ஒன்றில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஆனந்த தசநாயக்கா: சோமராமாவா அதை வெளியிட்டார்.

பிரதமர்! சோமராமாவை இங்கு இழுக்க வேண்டாம். சோமராமாவால் சுகம்அனுபவிப்பவர்கள் யார் என்று தெரியும்? (ம-இ)

## பெற்றோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் சைவப்பிரகாச வித்திசாலை பெற்றோர் தின விழா இன்று மாலை பாடசாலை விசேட அரங்கில் நடைபெறுகிறது.

வடமாநிலக்கல்வியதிபதி திரு. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவை மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆரம்பித்து வைப்பார்.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் ஏ மகாலிங்கம் ஆர் சோதிப்பெருமான் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்கள் [இ]

## பாப்பரசர் தினம்

(உடுப்பிட்டி)

பாப்பரசர் தினம் இன்று கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் கொண்டாடப்படவுள்ளது.

சரவெட்டிப் பங்குக்குரவர் அருட் திரு. யோ. அ. டொமினிக் அடிகளார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் ஆகியோர் உட்பட எம். பிக்கள் பலர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.

விழா முடிவில் சரவெட்டி திரு இருதயக்கல்லூரி மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## காணவில்லை

B. 104 -- 150921 மேற்படி இலக்க வர்த்தகவங்கி காசோலையும் ரூபா 1000 மும் கைதவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள்மலாயன் கபேயில் கொண்டு ,வந்து ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

041ச

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

